# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

கொங்கு மாமணி விருது நல்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

2001 – ஆம் ஆண்டு

1. திரு. **கே. எம். சென்னியப்பன்**
2. டாக்டர் **பழனி ஜி. பெரியசாமி**
3. திரு. ஜெம். **R. வீரமணி**

2002 – ஆம் ஆண்டு

4. திரு. **S.V. பாலசுப்பிரமணியம்**
5. திரு. **R. காந்தி**

2003 – ஆம் ஆண்டு

6. திரு. **D.R. கார்த்திகேயன்,** I.P.S. (Retd.)
7. திரு. **ஜி.ஆர்.சுந்தரவடிவேலு**
8. திருச்சி. **R. தேவராஜன்**

2004 – ஆம் ஆண்டு

9. முனைவர் சிலம்பொலி **சு.செல்லப்பனார்**
10. டாக்டர் **சி. பழனிவேலு**
11. டாக்டர் **B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர்**

2005 – ஆம் ஆண்டு

12. திரு. NSIT M. **முருகேசன்**
13. திரு. **K. பழனியப்பன்**
14. திரு. **C.K. இராமசாமி**

2006 – ஆம் ஆண்டு


15. திரு. **நல்லகோவிந்தசாமி**

16. சக்தி மசாலா திரு. **பி.சி. துரைசாமி**


17. திரு. **வி.கே.தங்கவேல்**

**'கொங்குமாமேதை' விருது பெற்றவர்**

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்



# கொங்கு மாமணி



## "கல்வெட்டறிஞர்" புலவர் செ. இராசு

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், தென்முகம் வெள்ளோடு கிராமத்தின் சிற்றூரான வெள்ளமுத்துக்கவுண்டன்வலசில் 1938 ஆம் ஆண்டு சாத்தந்தை குல திரு. சென்னியப்ப கவுண்டர் – திருமதி நல்லம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் இவர்.

திருப்பூர் கருவம்பாளையம், ஆலவாய்த் தண்ணீர்ப்பந்தல், ஞானிபாளையம், ஈரோடு (லண்டன் மிஷன்) பள்ளியில் தொடக்கக் கல்வியும், ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் 1959ல் பள்ளியிறுதி வகுப்பும் முடித்து திருப்பனந்தாள் காசிமடம் செந்தமிழ்க்கல்லூரியில் புலவர் ஆகப் பயின்று தமிழாசிரியராகப் பணியாற்றினார். ஓராண்டு நான்கு மாதம் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையில் பணியாற்றி, 1982 பிப்ரவரி முதல் 1998 சூலை முடிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர், இணைப்பேராசிரியர், பேராசிரியர், துறைத்தலைவராகப் பணிபுரிந்தார். ஓய்விற்குப்பின் மூன்றாண்டு ஆட்சிக்குழு (சின்டிகேட்) உறுப்பினராகவும் இருந்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனித்தேர்வெழுதி பி.லிட்., எம்.ஏ. தேர்ச்சி பெற்று மதுரைப் பல்கலைக்கழகத்தில் "கொங்கு நாட்டில் சமணசமயம்" என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார். இவர் எம்.ஏ., தேர்வெழுதும் போது இவர் கண்டுபிடித்த இரண்டு கல்வெட்டுக்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. பழங்கால கல்வெட்டுகளைப் படித்து ஆய்வு செய்வதில் சிறந்த நிபுணர்.

1959ல் ஆசிரியப்பணி தொடங்கியதிலிருந்து தமிழகத்தின் பல்வேறு

பகுதிகளிலும் குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் தீவிரக்கள ஆய்வு மேற்கொண்டு புதிய கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடிகள் முதலானவற்றை தேடிக்கண்டுபிடித்து ஆய்வு செய்து செய்தியாகவும், கட்டுரையாகவும், நூல் வடிவிலும் வெளியிட்டார். இதுவரை 155 ஆய்வு நூல்கள் வெளியிட்டுள்ளார். கருத்தரங்குக் கட்டுரைகள் 200 க்கு மேல் அளித்துள்ளார்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆவணங்கள் வெளியிடப்பட்ட பின் தமிழகச் சிற்றரசர், பாளையக்காரர், ஆதினங்கள், கோயில்கள், பொதுமக்கள் வெளியிட்ட ஆவணங்களைத் தொகுக்கும் முயற்சியை எவரும் மேற்கொள்ளவில்லை. தஞ்சை மராட்டியர், இராமநாதபுரம் சேதுபதிகள், புதுக்கோட்டை அறந்தாங்கித் தொண்டைமான்கள், சிவகங்கை அரசர்கள், திருக்கோயில், ஆதீனம், கொங்குநாட்டுப் பிற்கால ஆவணங்களை முயன்று ஆயிரக்கணக்கில் தொகுத்து உள்ளூர் வரலாற்று ஆவணங்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார். ஓய்வு பெற்ற பின் பல்கலைக்கழக மானியக்குழுவின் 4 லட்சம் ரூபாய் நல்கையில் தென்னிந்தியாவில் உள்ள பாடல் வடிவிலான கல்வெட்டுகளைத் தொகுத்துள்ளார். விரைவில் அவை வெளிவர உள்ளன.

தமிழகத்தின் தொன்மையான கொங்கு நொய்யல் கரை நாகரிகத்தை வெளிப்படுத்தினார். அறச்சலூரில் சங்க கால இசைக்கல்வெட்டு, பாடல்பொறித்த பழமங்கலம் நடுகல் கண்டுபிடிப்பு போன்றவை மிக முக்கியமானவை. தீரன் சின்னமலையின் பிறந்த, மறைந்த தேதிகளைக் கண்டுபிடித்து கள ஆய்வு மூலம் விரிவான வரலாறு எழுதியதுடன் காலிங்கராயன் கால்வாய் வரலாற்றையும் ஆய்வு செய்து நூல் வெளியிட்டுள்ளார். சென்னை, யாழ்ப்பாணம், கோலாலம்பூர், மதுரை, தஞ்சையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடுகளில் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

கலவெட்டறிஞர், கலைச்செல்வர், வரலாற்றறிஞர், கொங்கு வரலாற்றுச் செம்மல், தமிழ்க்காவலர் போன்ற பல பட்டங்கள் பெற்றவர் இவர். சிக்கலான செய்திகளில் உண்மை கண்டறிந்து வெளிப்படுத்துவதில் ஆர்வம் மிக்கவர். கண்ணகி கோட்டம், கச்சத்தீவு, காவிரி உரிமை, செந்தமிழ்வேளிர் எம்.ஜி.ஆர் போன்றவை அவ்வகை நூல்கள்.

காணி, ஊர், கோயிலோடு சேர்ந்த கொங்கு குல வரலாற்று நூல்கள் எழுபது எழுதி கொங்குச் சமுதாயத்தில் சமூக வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். உடல் நலிவுற்ற நிலையிலும் தனிமை ஓய்வைப் பயன்படுத்தி 81 கொங்கு குலங்களுக்குரிய 392 கல்வெட்டுக்ளையும், 70 காணிப்பாடல்களையும், 56 குலங்களுக்குரிய 75 செப்பேடு பட்டயங்களையும் தொகுத்து நூல் வடிவாக்கி காலிங்கராயன் கால்வாய், ஈரோடு மாவட்டக் கல்வெட்டுக்கள் ஆகிய ஐந்து நூல்களை ஒரே சமயத்தில் அண்மையில் வெளியிட்டார்.

இவ்வாண்டு சென்னையில் நடைபெற்ற ஏழாவது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் இவர் எழுதிய “தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்கள்” என்ற நூலை வெளியிட்டுப்பொற்கிழி வழங்கினர். செங்குந்தர், வேட்டுவர் போன்ற அனைத்துச் சமுதாய ஆவணங்களையும் தொகுத்து வருகிறார். இரு முறை தமிழக அரசின் சிறந்த நூல் பரிசு பெற்றுள்ளார்.

தமிழகத் தொல்லியல் கழகமும், இந்தியக் கல்வெட்டாய்வாளர் கழகமும் தமிழ்நாட்டின், இந்தியாவின் சிறந்த கல்வெட்டாய்வாளர் என்று விருதுச் செப்பேடு கொடுத்துப் பாராட்டியுள்ளது. கொங்கு ஆய்வு மையம் மூலம் கொங்கு நாட்டு வரலாறும், கொங்கு வேளாளர் கலைக்களஞ்சியமும் வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.


இவர் மனைவி பயிரகுல திருமதி கௌரியும், மக்கள் இரா. ஜெயப்பிரகாஷ், இரா. செந்தில்குமார், இரா. ஜெயமோகன் ஆகியோரும், குடும்பத்தினரும் இவர் ஆய்வுப்பணிகட்குத் துணையாக உள்ளனர்.

கல்வெட்டு ஆராய்ச்சியில் சாதனை படைத்த இவர் பெயர் கொங்கு வரலாறு கூறும் பொன்னேட்டிலும், கல்வெட்டிலும் நிச்சயம் இடம் பெறும்.

திறந்த புத்தகமாகத் தன் ஆய்வை வேண்டுவோர்க்கு அளித்து, தென்னகக் கல்வெட்டாய்வாளர் அனைவராலும், புலவரய்யா என்று அழைத்துப்போற்றப்படும் புலவர் செ. இராசு, கொங்குச் சமுதாய அமைப்புகள் அனைத்துடனும் தொடர்பு கொண்டவர். காட்சிக்கு எளியவர்; இனியர். மொழியையும், கொங்கு இனத்தையும் முன்னிறுத்தித் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்கின்ற இலக்கிய வித்தகர். பெரும் புலவர் பலர் போற்றிய கொங்கின வரலாற்றை

அகிலமெலாம் பரவச் செய்யும் இக்காலப் புலவர் இவர். கல்வெட்டுத் துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்துச் சிகரம் கண்டவர். கொங்கு நாட்டுத் தங்கங்களில் ஒருவர். ஆழ்ந்த அறிவும் புலமையும் கொண்டு கொங்கு மண்டலத்தின் பண்பாட்டுப் பயணத்தை வழி நடத்திச் செல்பவர் இவர். கொங்குச் சமுதாயத்தின் பெருமையை இவருடைய நூல்கள் உலகிற்கு என்றும் பறைச்சாற்றிக் கொண்டிருக்கும். தமிழகத்திற்கும் கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்க்கும் புலவர் செ. இராசு அவர்களுக்கு "கொங்கு மாமணி" விருதளித்துப் பாராட்டுவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

## கொங்கு மாமணி



## திரு. பெஸ்ட் S. ராமசாமி

கொங்கு இன மக்களின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தம்முடைய நேரத்தையும், உழைப்பையும், செல்வத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கும் நமது சமுதாய முன்னோடிகளில் மிக முக்கிய இடம் வகிப்பவர், 'கொங்கு இனக்காவலர்' என அன்போடு அழைக்கப்படுகின்ற திரு. பெஸ்ட் S. ராமசாமி ஆவார். உழைப்பால் உயர்ந்த மனிதருக்கு இவர் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.

திரு. பெஸ்ட் ராமசாமி அவர்கள் திரு.நா.சென்னிமலைக்கவுண்டர் – திருமதி நஞ்சம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாக 1946 ஆம் ஆண்டு அந்துவன் குலத்தில் கோயமுத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் உள்ள வேலாயுதம்பாளையம் என்ற சிற்றூரில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். ஏழாம் வயதில் தந்தையை இழந்த இவர், 12ஆம் வயதில் திருப்பூருக்குக் குடிபெயர்ந்து அங்கு ஒரு தொழிலாளியாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் திருப்பூரில் வேகமாக வளர்ந்து கொண்டிருந்த பனியன் தொழில் மீது மிகுந்த ஆர்வம் கொண்டு ரூ. 10,000 ஐ மட்டும் மூலதனமாகக் கொண்டு 1966 ஆம் ஆண்டில் "Best Knitting Company" என்ற பெயரில் ஒரு புதிய கம்பனியைத் தொடங்கினார். கடினமாக நன்கு திட்டமிட்டு நம்பிக்கையோடு இரவு பகல் பாராமல் உழைத்து தன் தொழிலை அபிவிருத்தி செய்தார்.

இவர் உற்பத்தி செய்த பனியன் தென்னிந்தியாவில் மட்டுமல்லாமல், டெல்லி, மும்பை போன்ற வடஇந்திய நகரங்களிலும் விற்பனையாயிற்று. முதன் முதலாக 1980 ஆம் ஆண்டு "உகாண்டா" நாட்டிற்குப் பனியனை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்து,

இன்று U.S.A., U.K.,. ஹாங்காங், ஐரோப்பிய நாடுகள் போன்ற பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார். இவர் **1983** ஆம் ஆண்டு இத்தாலியிலும் பின்னர் பிரான்ஸ், ஜெர்மன், U.K. போன்ற நாடுகளிலும் நடை பெற்ற ITMA (International Textile Manufacturers Association) என்ற சர்வதேச தொழில் கண்காட்சிக்குத் தவறாமல் சென்று அங்குள்ள நவீன தொழில் நுட்பங்களை அறிந்து வந்து தன் தொழிலில் புகுத்தி உற்பத்தியைப் பெருக்கினார். மேலும், இவர் U.S.A., ஜப்பான், சீனா, ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரிக்கா போன்ற பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். ஜப்பான் நாட்டில் அங்குள்ள தொலைக்காட்சியில் இந்தியாவின் தொழில் வளர்ச்சி பற்றி ஆங்கிலத்தில் ஒரு மணிநேரம் உரையாடி அனைவரையும் வியக்க வைத்தவர் இவர்.

திரு. பெஸ்ட் ராமசாமி பனியன் தொழிலில் எற்படும் பொதுப் பிரச்சனைகளுக்கு தான் முன்னின்று அதை தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்வார். **1980** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஹோசைரி பேக்டரி ஆசோசியேஷன் மூலமாக, பனியனுக்கு விதித்திருந்த உற்பத்தி வரியை (Central Excise) நீக்கிட இவர் அப்போதைய மத்திய அமைச்சர் திரு. ஆர் வேங்கடராமன் அவர்களை டில்லியில் சந்தித்துப் பேசி உற்பத்திவரியை நீக்கப் பாடுபட்டார். **1984** ஆம் ஆண்டு திருப்பூரில் தொடர்ந்து **4** மாதத்திற்கு மேல் ஒரு பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. பனியன் தொழில் அழியும் அபாயநிலையில் அப்போது நடைபெற்ற போராட்டத்தில் பனியன் உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் சிறைக்குச் சென்றுள்ளார். **1985** ஆம் ஆண்டு International Knitting Federation Conference டெல்லியில் நடந்தபோது அதில் கலந்து கொண்டு பனியன் தொழில் முன்னேற்றம் பற்றி விவாதித்துள்ளார்.

இவ்வாறு தன்னுடைய கடின உழைப்பால் இடையில்வந்த சோதனைகளைச் சாதனையாக்கி இன்று Best Group கம்பனிகளுக்குத் தலைவர் (Chairman) ஆக உள்ளார். பெஸ்ட் குரூப்பில் **1.** Best Knitting Company 2. Best International 3. Best Cotton Mills (P) Ltd. 4. R.R.D Tex (P) Ltd., 5. Best Colour Solutions (P) Ltd., 6. Nanco Hoisery Mills. 7. Vijaya Pinning Mills. 8. Vijay Industrials ஆகிய நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் **5000** பேர் நேரடியாக வேலை செய்து கொண்டுள்ளனர். தொழிலாளர் நலன் காக்க பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளார்.

சிறந்த தொழிலதிபருக்கான விருதை மத்திய நிதியமைச்சர் திரு.ப. சிதம்பரம் அவர்களிடமிருந்து 2005 ஆம் ஆண்டு பெற்றுள்ளார்.

கொங்கு இனமக்கள் மீது எப்போதும் பற்றும் பாசமும் உடையவர். கொங்கு சமுதாயம் முன்னேறவும் கொங்குச் சமுதாயத்தில் ஒற்றுமையை உண்டாக்கவும் ஒத்த கருத்துடைய தனது நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு 1976 ஆம் ஆண்டிலேயே கொங்கு வேளாண் மன்றம் என்ற அமைப்பைத் திருப்பூரில் நிறுவினார். பின்னர் இம்மன்றம் 1979 ஆம் ஆண்டு திருப்பூர் கொங்கு வேளாளர் அறக்கட்டளை (Charitable Trust) ஆக உருவெடுத்தது. இந்த அறக்கட்டளையின் முதல் பொதுச்செயலாளராக 7 ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் 1986 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை இந்த அறக்கட்டளையின் தலைவராகச் சிறந்த முறையில் பணியாற்றினார். அறக்கட்டளையின் நிதி நிலையை மேம்படுத்த நடிகர்கள் திரு. சிவக்குமார், திரு. சத்யராஜ் கலந்து கொண்ட நாடகத்தை நடத்தினார். அறக்கட்டளை சார்பில் பிரமாண்டமான கொங்கு கலையரங்கம் ஒன்றைக் கட்டிய பெருமை இவருக்குண்டு. கலைமாமணி சிவகுமார் தலைமையில் திறக்கப்பட்டது. கல்விப்பணி தொடர "கொங்கு நர்சரி பள்ளி" ஒன்றும் அங்கேயே ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளி இன்று கொங்கு வேளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக உயர்ந்துள்ளது. இப்பள்ளியில் இன்று சுமார் 2000 பேர் கல்வி கற்று வருகின்றனர்.

கொங்கு இனமக்களை ஒன்று திரட்ட அமரர் அரூர் முத்து கவுண்டர் அவர்களின் முயற்சியால் 1988 ஆம் ஆண்டு சென்னையில் நம் கொங்கு முன்னோடிகள் ஒன்று கூடி "கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை" என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள். திரு. கோவை செழியன் இப்பேரவையின் தலைவராகவும், திரு. பெஸ்ட் ராமசாமி மாநில பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திரு. கோவை செழியனின் மறைவுக்குப்பின், கொங்கு வேளாளக்கவுண்டர் பேரவையின் மாநில கௌரவத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொங்கு சமுதாயத்திற்குப் பல அரிய சேவைகளைச் செய்து வருகிறார். இவர் திருப்பூரில் கொங்கு பாதுகாப்புப்படை, தீரன் சின்னமலை அறக்கட்டளை, கொங்கு வேலைவாய்ப்புத் தகவல் மையம், கொங்கு இரத்ததான தகவல் மையம், கொங்கு

திருமணத் தகவல் மையம் முதலிய அமைப்புகளை நிறுவி, கொங்கு இனமக்களுக்கு மகத்தான சேவையைச் செய்துவருகிறார். நன்றாகப் படிக்கும் கொங்கு இன ஏழை மாணவர்களுக்கு வருடந்தோறும் உதவி செய்கிறார். இவரைத் தமிழக அரசு தீரன் சின்னமலையின் சிலை அமைப்புக்குழு உறுப்பினராக நியமித்தது. இப்போதும் தீரன் சின்னமலையின் அரசு விழாக் குழு உறுப்பினராகப் பணியாற்றுகிறார். கொங்கு இன மக்கள் மீது PCR சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்ட போதெல்லாம், அவர்களுக்காகப் போராடியுள்ளார்.

இவர் ஏனைய துறைகளிலும் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். தமிழக அரசு இவரை தமிழ்நாடு பாரத சாரண, சாரணிய இயக்கத்தின் திருப்பூர் கல்வி மாவட்டத் தலைவராக 1987 ஆம் ஆண்டு நியமித்தது. 15 ஆண்டுகள் இதன் தலைவராக இருந்தபோது 1000 சாரண, சாரணியர்கள் ஜனாதிபதி விருதும், 4000 சாரண, சாரணியர்கள் கவர்னர் விருதும் பெற்றதே இவர் இவ்வியக்கத்தை நன்கு நடத்தியதற்குச் சான்றாகும். இவர் All India Radio ல் 'சிகரத்தை நோக்கி' என்ற தலைப்பில் ஆற்றிய உரை இன்றைய இளைஞர்களுக்குச் சிறந்த வழிகாட்டுவதாக அமைந்தது.


இவர் படிப்பில் அதிக நாட்டம் உடையவர். தாம் இளமையில் கல்வி கற்க முடியவில்லையே என்ற குறையைப் போக்கவும், கல்வியின் அவசியத்தை அனைவருக்கும் உணர்த்தும் வகையிலும் Distance Education (Correspondence Course) மூலம் படித்து தன்னுடைய 60 ஆம் வயதில் B.A. பட்டம் பெற்றார். இந்தியில் மிகச் சரளமாகப் பேசக்கூடியவர். ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மொழிகளில் உரையாடக்கூடியவர். இவருக்கு கோவிந்தம்மாள் என்ற அக்காவும், பெரியசாமி என்ற தம்பியும் உள்ளனர். இவரது வெற்றிக்குப் பின்னால் உள்ளவர் இல்லறத்தை நல்லறமாகப் போற்றும் இவர் மனைவி திருமதி லட்சுமியம்மாள். திரு. ஆர். ராஜ்குமார், திரு. ஆர். தனபால் என இரண்டு மகன்கள் பெஸ்ட் குழுமத்தில் M.D. ஆகவும் , Joint MD ஆகவும் பொறுப்பேற்றுத் தந்தைக்கு எல்லாவகையிலும் உற்ற துணையாக உள்ளனர். திருமதி அருணாதேவி ராஜ்குமார், திருமதி நர்மதா தனபால் ஆகியோர் கொண்ட குடும்பம் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.

தொழில்துறையில் சாதனை, கொங்குச் சமுதாய சேவையில் சாதனை, சமூக சேவையில் சாதனை என இவரின் சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். திரு. பெஸ்ட் இராமசாமி அவர்கள் ஓய்வறியா கடின உழைப்பு, எளிமை, இன்சொல், மனித நேயம் போன்ற அரிய குணங்களின் மொத்த உருவமாகத் திகழ்வதுடன்,

தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலிதரும்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்பவர். கொங்கின மக்களுக்காக அயராது பாடுபட்டு, அரிய பல சேவைகள் புரிந்து கொங்கு சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தந்துள்ள திரு. பெஸ்ட் ராமசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு மாமணி" விருது அளித்து கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.

## கொங்கு மாமணி



## பத்மஸ்ரீ டாக்டர். க.ரா. பழனிசாமி

1949 ஆம் ஆண்டு கோபிசெட்டிப்பாளையம் கள்ளிப்பட்டி கிராமத்தில் பொருள்தந்த கூட்டத்தைச் சேர்ந்த திரு. கே.எம். இராமசாமி – திருமதி மரகதம் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் இவர்.

கள்ளிப்பட்டி பள்ளியில் முதல் மூன்று வகுப்புகள், திருப்பராய்த்துறை பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரை கோபி வைரவிழா உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதிவரை என பள்ளி வாழ்க்கை அமைந்தது. தாய்மாமா திரு. என்.எஸ்.நடராஜன், ஆசிரியர் திரு. மாரப்பன் ஆகியோர் இவர் சிறந்த மாணவராக விளங்கியதில் பெரும் பங்கு கொண்டவர்கள்.

சென்னை கிருஸ்துவக் கல்லூரியில் புகுமுக வகுப்பு (PUC) முடித்தார். கர்நாடக மாநிலத்தில் தாவன்கெரே JJM மருத்துவக் கல்லூரியில் 1972 ல் MBBS பட்டம் பெற்றார். கல்லூரி இறுதி ஆண்டில் Pharmacology துறையில் விருதும், சிறந்த மாணவர் (Best outgoing student) விருதும் பெற்றுச் சாதனை படைத்தார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் 1977 ல் M.D. (Internal Medicine) பட்டமும், 1981 ல் D.M. (Gastroenterology) பட்டமும் பெற்றார். 1981 முதல் 1986 வரை சென்னை மருத்துவக் கல்லூரியில் குடல் இரைப்பைத் துறையில் (Department of Gastroenterology) உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். 1986 ஆம் ஆண்டு சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இத்துறையை உருவாக்கி, நிறுவனர் மற்றும் தலைவராக 2000 ஆம் ஆண்டுவரை சிறப்பாகப் பணியாற்றினார். அனைத்து வசதிகளையும், நவீன தொழில் நுட்பக்கருவிகளையும் கொண்ட மிகச்சிறந்த துறையாக உருவாக்கி வெற்றி கண்டார். இந்தத்துறையில் இதைவிடச்

சிறப்பான மருத்துவ வசதியோ, சிகிச்சையோ நாட்டில் வேறெங்கும் இல்லை என்ற அளவுக்கு அரும்பாடுபட்டுத் துறையை மேம்படுத்தினார்.

தேசிய அளவிலும், உலகளாவிய அளவிலும் எண்ணற்ற கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். Hepatitis, Portal, Hypertension, Pepticulcer and endoscopy ஆகிய துறைகளில் சிறந்த நிபுணத்துவம் பெற்று விளங்குபவர். பல சர்வதேச மருத்துவ மாநாடுகளில் கலந்து கொண்டு விவாதங்களில் பங்கு கொண்டவர் இவர். குடல் மற்றும் இரைப்பை சம்பந்தப்பட்ட, உலகப்புகழ்பெற்ற மருத்துவ மனைகள் பெரும்பாலானவற்றிற்கும் நேரில் சென்று துறையின் நவீன மருத்துவ சிகிச்சைபற்றி அறிந்து வந்திருக்கிறார்.

1986 ஆம் ஆண்டு ஜெர்மனிக்கும், 1987 ஆம் ஆண்டு USSR க்கும் கல்வி பரிமாற்றல் திட்டத்தின் கீழ் பேராளராகச் சென்ற பெருமை இவருக்குண்டு. நாட்டின் புகழ்பெற்ற சஞ்சை காந்தி முதுநிலை மருத்துவ நிறுவனத்தின் கல்விக்குழுவில் உறுப்பினராய்ப் பணியாற்றும் பெரும் சிறப்பையும் இவர் பெற்றுள்ளார். தமிழ்நாடு M.G.R. மருத்துவப் பல்கலைக்கழகக் கல்விக்குழுவின் உறுப்பினராய்ப் பணியாற்றியுள்ளார்.

நாட்டில் உள்ள பல மருத்துவப் பல்கலைக் கழகங்களில் D.M. (Gastroenterology) படிப்புக்குத் தேர்வாளராய் இருந்துள்ளார். 2005 ஆண்டு இங்கிலாந்து நாட்டின் கிளாஸ்கோவில் உள்ள Royal College of Physicians இவருக்கு FRCP என்ற உயரிய பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இது இவருடைய மருத்துவ நற்பணிகளுக்காகக் கிடைத்த சிறந்த அங்கீகாரமாகும். ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகச் சென்னை ராமகிருஷ்ணா மடத்தில் என்டோஸ்கோப்பி துறை சம்பந்தமான மருத்துவச் சேவையை இலவசமாக அளித்துவருகிறார். ஏழை மக்களுக்கு அளிக்கப்படும் இச்சேவையில் மனமகிழ்ச்சியைக்காணும் மனிதநேயம் கொண்ட மருத்துவராய் விளங்குகிறார் இவர்.

“Indian Society of Gastroenterology and Society for Endoscopy of India” என்ற அமைப்பிற்குத் தலைவராகப் பணிபுரிந்து தமிழகத்திற்குப் பெரும் பெருமை சேர்ந்தார்.

2001 – 2002 ஆண்டு குடல் இரைப்பைப் பிரிவு அமைப்பின் தமிழ்நாடு செயலாளராய்ப் பொறுப்பேற்றுத் திறம்பட பலரும் போற்றும் வண்ணம் பணியாற்றினார்.

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய குடல் இரைப்பை மருத்துவச் சங்கம் தன்னுடைய வருடாந்திர மாநாட்டைச் சென்னையில் நடத்த வேண்டும் என்று கூறி, அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, மாநாட்டை அனைவரது பெரும் பாராட்டுதல்களுடன் நடத்திக்காட்டினார். தமிழகத்தில் இத்துறையில் ஒரு பெரிய மாற்றத்தை, எழுச்சியை ஏற்படுத்த இந்த மாநாடு ஒரு நல்ல தூண்டுகோலாக அமைந்தது. இந்தியாவிற்கே இந்த மாநாடு இந்தத் துறையைப் பொறுத்த அளவில் ஒரு மைல்கல்லாக அமைந்தது என்று மருத்துவ வல்லுனர்கள் பாராட்டியது இவரது புலமைக்கும், திறமைக்கும், தொலைநோக்குப் பார்வைக்கும் சான்றாகத் திகழ்ந்தது. 2004–2005 ஆம் ஆண்டுகளில் தேசிய அளவில் கேஸ்ட்ரோ என்டிராலஜி அமைப்புக்கே தலைவராக விளங்கி, பலரும் போற்றும் வண்ணம் சிறப்புறப் பணியாற்றினார்.

ஹெபாடிப்டிஸ் பி மற்றும் காமாலை நோய்களுக்குத் தடுப்பூசி மருந்து கொண்டுவர இவர் முக்கியக் காரணியாக விளங்கினார். அரசின் தடுப்பூசி மருந்துத் திட்டத்தில் இம்மருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டதில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு, 2005 ஆம் ஆண்டு மாண்டிரிஸ் நகரில் நடந்த சர்வதேச மாநாட்டில் தடுப்பூசி மருந்து பற்றி இவர் ஆற்றிய உரை மருத்துவ உலகில் பெரிய வரவேற்பைப் பெற்றது.

அனைத்திந்திய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் குடல் மற்றும் இரைப்பை மருத்துவத்துறை சார்ந்த கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் முனைப்புடன் கூடிய இவரது பங்களிப்புகளால் பலரும் பயன்பெறுகின்றனர். இவரது பணி, குன்றில் இட்ட விளக்காக விளங்கி வருகிறது என்றால் அது மிகையல்ல.

அனைத்துப் பாராட்டுகளுக்கும், கௌரவங்களுக்கும் மகுடம் சூட்டுவது போல் இந்திய அரசு இந்த ஆண்டு இவருக்கு “பத்ம ஸ்ரீ” விருது வழங்கி மனித குலத்திற்குப் பயனளிக்கக் கூடிய இவருடைய மருத்துவச் சேவையை அங்கீகரித்து, கௌரவித்துள்ளது.

“புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க டாக்டர் பழனிசாமி அவர்களின் வாழ்க்கையில் அவரது துணைவியார் திருமதி பத்மினி அவர்களுடைய மிகச்சிறந்த தொலைநோக்குப் பார்வை ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம்.

டாக்டர் பழனிசாமி அவர்களின் மகள் செல்வி நேத்ரா அமெரிக்காவில் உயர்கல்வி பயின்று பணியாற்றி வருகிறார்.

2000 ஆம் ஆண்டிலிருந்து சென்னை அப்போலோ மருத்துவமனையில் குடல் இரைப்பை மருத்துவத் துறையின் தலைசிறந்த மருத்துவ நிபுணராய்ப் பணியாற்றி வருகிறார்.

நாடு போற்றும் மருத்துவர், உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை கொண்டு சாதனைகள் படைத்துள்ள பேராசிரியர் டாக்டர் பத்மஸ்ரீ கே.ஆர்.பழனிசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு மாமணி” விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்


## கொங்கு சாதனையாளர்

## விருது அளித்துச் சிறப்பிக்கப் பட்டவர்கள்

### 2006 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | முனைவர் கே. அரங்கசாமி | – | சிறந்த கல்வி மற்றும் சமுதாயப்பணி |
| 2. | திரு. சி. ஆறுமுகம் | – | சிறந்த பொறியாளர் மற்றும் சமுதாயப்பணி |
| 3. | திரு. கே.கு.கோ. சுகுமாரன் | – | ஆன்மீகம் மற்றும் கலாச்சாரப் பணி |
| 4. | டாக்டர் பி. கிருஷ்ணசாமி | – | சிறந்த கொங்கு எழுத்தாளர் (சாகித்ய அகாடமி விருது) |
| 5. | திரு. பா. கந்தசாமி | – | சுற்றுச்சூழல் மற்றும் விழிப்புணர்வுப் பணி |
| 6. | திரு. ஆர். ராமசாமி | – | சுதந்திரப் போரட்டத் தியாகி |
| 7. | திரு. எஸ்.ராஜேஷ் | – | வைராக்கிய வீரர், Software Engineer |
| 8. | திரு. எஸ்.குணசேகரன் | – | சிறந்த கல்வி மற்றும் சமுதாயப்பணி |
| 9. | டாக்டர் வி.ஆனந்த் | – | சிறந்த மருத்துவப்பணி (ENT) |
| 10. | டாக்டர் ஏ.கே.ராமசாமி | – | சிறந்த சமுதாய மற்றும் கல்விப்பணி |
| 11. | திரு. ஆர். ராஜ்குமார் | – | கின்னஸ் சாதனை |
| 12. | திரு. எஸ். சுசீந்தரன் | – | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 13. | திரு. என்.பி. வேலு | – | சிறந்த சமுதாயப்பணி |

## கொங்கு சாதனையாளர்



## திரு. K. பாலசுப்பிரமணியன்

கோவை மாவட்டம் பல்லடம் வட்டம் பனப்பாளையம் கிராமத்தில் காடைகுலச்தைச் சேர்ந்த திரு. P.P. கந்தசாமி கவுண்டர் – திருமதி கந்தம்மாள் தம்பதியருக்கு முதல்மகனாக 1951 ஆம் ஆண்டு பிறந்தவர். திரு. K. பாலசுப்பிரமணியன் அவர்கள்.

1969 – ஆம் ஆண்டு பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்தார். திறமை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, அயராத உழைப்பு ஆகிய அருங்குணங்களை மூலதனமாகக் கொண்டு சென்னையில் பிரிசிசன் குரூப் கம்பெனி (Precision Group Company) யைத் தொடங்கினார். சிறிய அளவில் தொடங்கப் பெற்ற இந்த நிறுவனம் இன்று Precision Equipment, Precision Machine, Kay Bee Engineering என மூன்று பெரிய நிறுவனங்களாக வளர்ந்தோங்கியுள்ளது. இந்த நிறுவனங்களின் தொழிற்சாலைகள் ஏழு இடங்களில் உள்ளன. சுமார் 500 தொழிலாளர்கள் இத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். சீரிய முயற்சியாலும், ஓய்வறியா உழைப்பாலும் சிறந்த முதல் தலைமுறை தொழிலதிபராக வளர்ந்துள்ளவர் இவர்.

சமூக சேவையிலும், சமுதாயச் சேவையிலும் பெரிதும் நாட்டம் கொண்டவர். ஏழை மாணவர்களுக்கும், விவசாயிகளுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்பவர். காட்சிக்கு எளியவராய், கடுஞ்சொல் அற்றவராய், அனைவரிடமும் இன்முகம் காட்டுபவராய் விளங்கும் மனித நேய மாண்பாளர்.

இவர் பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். 40 லட்சம் ரூபாய் செலவில் முன்னாள்

மாணவர் நினைவுக் கட்டிடம் ஒன்றை எழுப்பி, அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றவர் இவர். ஜப்பான் AOTS முன்னாள் பயிற்சியாளர்களின் சங்கத்தலைவராக நான்கு வருடங்கள் பணியாற்றியுள்ளார். ஜப்பானிய '5S' செயல்முறை பற்றி இவர் எழுதிய மூன்று புத்தகங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றதுடன் மிகவும் பயனுள்ளதாகவும் உள்ளன. இத்துறையில் நிபுணத்துவம் பெற்று '5S' சிறப்புப் பயிற்சியாளராகவும், தணிக்கையாளராகவும் உள்ளார் என்பது இவருடைய திறமைக்குச் சான்றாக விளங்குகிறது.

நந்தம்பாக்கத்தில் அமைந்துள்ள சீனிவாசப்பெருமான் இராஜகோபுரத் திருப்பணியை ரூ. 1 கோடி செலவில் வெற்றிகரமாகச் செய்து முடித்த பெருமை இவருக்குண்டு.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கச் செயற்குழு உறுப்பினராக, இணைச் செயலாளராக, துணைத்தலைவராக மற்றும் தலைவராகப் பொறுப்பேற்று கொங்குச் சமுதாய வளர்ச்சிக்கும், கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர், பங்காற்றி வருகின்றவர் இவர். செயலாளராக இருந்த போது மகளிர் விடுதி, கொங்கு மாவீரன் தீரன் சின்னமலை சிலை அமைப்பில் முக்கியப் பங்கு, சங்கத் தலைவராக இருந்த போது தீரன் சின்னமலை தபால்தலை வெளியீடு, புதுப்பொலிவுடன் உருவாகிவரும் புதிய விருந்தினர் இல்லக்கட்டிடம் விலைக்கு வாங்கியது முதலியன இவரது சாதனை மகுடத்தின் மணிகளாகும்.

தற்போது கொங்குப் பேரவை மாநிலத் துணைத்தலைவராகவும், நந்தம்பாக்கம் அரிமா அறக்கட்டளை நிறுவன அறங்காவலராகவும், அகில இந்திய '5S' சம்மேளனத் தலைவராகவும், சென்னை மாவட்டச் சிறுதொழில் சங்கத்தலைவராகவும் பொறுப்பேற்று, மிகச்சிறப்பான முறையில் பலரது போற்றுதலையும் பாராட்டுதல்களையும் பெற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.


இவருடைய சாதனைகளைப் பாராட்டி முன்னாள் குடியரசுத்தலைவர் மேதகு A.P.J அப்துல்கலாம் அவர்களிடமிருந்து Jewel of Nachimuthu Polytechnic Award என்ற சிறப்பு விருதைப் பெற்றுள்ளார்.

இவருடைய வெற்றிகளுக்குப் பின் நிற்கும் இவருடைய மனைவி திருமதி

பத்மா, சகோதரர் திரு. கே.ஈஸ்வரமூர்த்தி, மகன்கள் திரு. P. பிரபு B.E., M.S., திரு.P.கார்த்திக் B.E., மருமகள் திருமதி ஜெயலட்சுமி பிரபு ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

சிறந்த தொழிலதிபராக விளங்கி, சமுதாயப்பணியில் சாதனைகள் நிகழ்த்தியுள்ள கொங்கு நாட்டுத் தங்கம் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர் விருது” வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## திரு. இரா. தமிழ்மணி

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் **1942** ஆம் ஆண்டு திரு. பா.து.இராசன் – திருமதி வெள்ளச்சியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர், திரு. இரா. தமிழ்மணி ஆவார். இவரது தந்தை திரு. பா.து.இராசன் அவர்கள் தருமபுரி மாவட்ட கொங்குச் சமுதாய முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும், பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சித் தலைவராகவும் சுமார் **20** ஆண்டுகள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, பாப்பிரெட்டிப்பட்டியின் இன்றைய வியத்தகு வளர்ச்சிக்கு முக்கிய காரணகர்த்தாவாகவும், பொதுவுடமை, பகுத்தறிவுக் கொள்கைகளில் ஆழ்ந்த பிடிப்பும் கொண்டவராகவும் விளங்கியவர்.

திரு. தமிழ்மணி அவர்கள் திருச்சி St. Joseph's கல்லூரியில் B.A., (Economics) படிப்பும், சென்னை சட்டக்கல்லூரியில் B.L. பட்டப்படிப்பும் முடித்தார். சிறந்த விளையாட்டு வீரராகவும், சொற்பொழிவாளராகவும் கல்லூரி மாணவர் பருவத்தில் திகழ்ந்த இவர் பல பரிசுகளை வென்றுள்ளார். **1965** ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரப்பங்கு கொண்டு சிறை சென்றுள்ளார். சென்னை உயர்நீதி மன்றத்தில் சில மாதங்கள் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

**1966** ஆம் ஆண்டு TNPSC Group I தேர்வில் வெற்றி பெற்று இணை வணிகவரி அலுவலர் பதவியில் கொங்குச் சமுதாயத்தின் முதல் Group I அலுவலராகப் பணியில் சேர்ந்த சிறப்புப் பெற்றவர் இவர். **1967** ஆம் ஆண்டுமுதல் **2000** ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு வணிகவரித்துறையில் வணிவரித்துறை அலுவலர், உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் எனப் பல்வேறு பொறுப்புகளில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தமிழக அரசின் வணிவரித்துறையில் பல சீர்திருத்தங்களைப்புகுத்தி, தமிழக அரசுக்கு

வணிகவரித்துறையின் மூலம் கணிசமான வருவாய் வருவதற்கு முக்கியப் பங்காற்றியவர். அதன் காரணமாகத் தமிழக முதல்வரின் பாராட்டுதல்களைப் பெற்றவர்.

2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தின் (TNPSC) உறுப்பினராய் நியமிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு வரை அப்பதவியில் பணியாற்றினார்.

கல்வியில் மிகவும் பின்தங்கிய தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் 27 ஆண்டுகளுக்கு முன்பே பா.து.இராசன் நினைவு மெட்ரிக் பள்ளியைச் சகோதரர்கள் டாக்டர் இரா. குமாரராஜ் (கால்நடை மருத்துவக்கல்லூரிப் பேராசிரியர்), திரு.இரா.மோகன் (இந்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல்) துணையுடன் தோற்றுவித்தார். தருமபுரி மாவட்டத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இவருடைய சீரிய தலைமையின் கீழ் அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டியில் இரண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகள், இரண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், இரண்டு கல்வியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கிராமப்புற மாணவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த ஒரேவழி கல்விதான் என முடிவு செய்து பின்தங்கிய பகுதிகளிலேயே தரமான கல்வியைத் தரவேண்டும் என்ற நோக்கத்துடன் உழைத்து, கல்விப்பணியாற்றி வருபவர், திரு. தமிழ்மணி அவர்கள்.

தன் பெயருக்கேற்ப தமிழின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். ஒப்வறியா உழைப்பு, உதவி கேட்டு வருகின்றவர்களுக்கு, முடிந்தவரை உதவும் தாராள குணம், எல்லோரிடமும் அன்பும் இன்முகமும் காட்டும் மனிதநேய மாண்பு போன்ற உயரிய பண்புகளுக்குச் சொந்தக்காரர்.

இவருடைய மனைவி திருமதி பத்மாவதி இவரது சாதனைகளுக்குத் துணைநிற்பவர். மகன் டாக்டர் T.இளங்கதிர் அயர்லாந்து நாட்டில் புகழ்பெற்ற மருத்துவராய்த் திகழ்கிறார். மகள் திருமதி பொற்கொடி மோகன் அயர்லாந்து பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார். இவரது கணவர் டாக்டர் P. மோகன் அயர்லாந்தில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிபுணராகப் பணிபுரிகிறார்.

தன்னுடைய செல்வம், செல்வாக்கு, அனுபவம், திறமை இவற்றையெல்லாம் கிராமப்புற பின்தங்கிய மக்களின் கல்வி மற்றும் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்திவரும் இவரின் கல்விப்பணி மற்றும் அரசுப்பணி, மிகவும் போற்றத்தக்கது; பாராட்டத்தக்கது. 'சொலல் வல்லன், சோர்விலன், அஞ்சான்' என்ற குறள் நெறிக்கேற்ப வாழ்ந்துவரும் இவர் தன் சாதனைகளால் கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறார். இவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "சாதனையாளர் விருது" வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



# Dr. விமலா இராமலிங்கம்

கொங்கு நாட்டுத் தங்கங்கள் நீதிபதி கைலாசம் – திருமதி சௌந்திரா கைலாசம் தம்பதியரின் மகளாகப் பிறந்தவர் டாக்டர் விமலா இராமலிங்கம். தந்தை நீதியரசராகப் பெரும் புகழுடன் விளங்கி, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்தவர். தாய் டாக்டர் சௌந்திரா கைலாசம் தமிழகக் கவிஞர்களில் முன்னணியில் உள்ளவர். புகழ்பெற்ற சமூக சேவகி. டாக்டர் விமலா அவர்களின் கணவர் டாக்டர் கே.கே. இராமலிங்கம் இந்தியாவின் மிகச்சிறந்த ENT மருத்துவர்களில் ஒருவர். மகன் டாக்டர். ரவி ராமலிங்கம் சென்னையில் புகழ்பெற்ற ENT மருத்துவர். மகள் திருமதி சோபா நடராஜன்.

டாக்டர் விமலா இராமலிங்கம் MBBS, M.D., Pediatrics, DCH ஆகிய பட்டங்களைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். ஆஸ்திரேலியா அரசின் Fellowship in Blood Transfusion என்ற உயரிய விருதையும் பெற்றுள்ளார்.

எய்ட்ஸ் நோய் (AIDS) கட்டுப்பாட்டுச் சங்கத்தின் இணை இயக்குநராகப் பணியாற்றிள்ளார். STD, HIV,AIDS போன்ற நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான திட்டங்களையும் வழிமுறைகளையும் உருவாக்கிச் செயல்படுத்துவதில் பெரும் பங்கு கொண்டிருந்தார்.

சென்னையிலுள்ள குழந்தைகள் நல மருத்துவமனையில் பேராசிரியராகப் பணியாற்றிய போது, இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 1000 இரத்ததான முகாம்களை நடத்தியும், ஓர் இலட்சத்திற்கும் அதிகமான இரத்ததான கொடையாளர்களைப் பதிவு செய்தும் சாதனைபடைத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல், உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organisation), HIV / AIDS திட்டத்தின் தேசிய ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். இத்திட்டத்தின் மூலம் தாம்பரம் அரசு மருத்துவமனையில் இதுவரை சுமார் 6000 HIV / AIDS நோயாளிகளுக்குத் தேவையான மருந்தும், சத்துணவும், ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே இந்தத்திட்டம் இங்கு மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாட்டில் பிரிட்ஜ் நிறுவனத்தின் பேரழிவு மேலாண்மைப்பிரிவு ஆலோசகராகப் பணிபுரிந்து வருகிறார்.

சுனாமி, பூகம்பம் முதலான இயற்கைச் சீற்றங்களால் ஸ்ரீலங்கா, இந்தோனேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் பாதிக்கப்பட்டோர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்துகொடுக்கப் பாடுபட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்ட இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுச்செயலாளராகப் பணியாற்றியுள்ளார். உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டமைப்பின் துணைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இந்திய செஞ்சிலுவைச் சங்கம் வெறும் உதவிகள் அளிக்கும் நிறுவனம் என்ற நிலையிலிருந்து, பேரழிவு மேலாண்மை நிறுவனமாக மாற்றியதில் இவருக்குப் பெரும்பங்குண்டு.

ஒரிசாவில் ஏற்பட்ட பெரும்புயல், குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் ஜாதிக்கலவரம் போன்ற பேரழிவுகள் நடந்தபோது நிவாரண உதவிகளை முன்னின்று செய்த மனிதநேய மிக்க பெண்மணி இவர்.

HIV / AIDS மற்றும் இரத்தப்பாதுகாப்பு, AIDS நோய் உண்மைகள் பற்றி எட்டு நூல்கள் எழுதி வெளியிட்டு மனித குலத்திற்கு மாபெரும் சேவை செய்துள்ளார். இந்த மருத்துவமாமணி, Phychosocial Support in Disaster Management என்ற நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.


இந்திய செயின்ட் ஜான்ஸ் ஆம்புலன்ஸ் அமைப்பின் தலைமை ஆணையராகவும், இந்திய அரசின் பேரழிவுகள் மேலாண்மை உயர்மட்டக்குழு

உறுப்பினராகவும், Help Age India அமைப்பின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு இந்திய அரசிடமிருந்து பெண் சாதனையாளர் என்ற உயரிய விருதைப் பெற்றுள்ளார். 2002 ஆம் ஆண்டு குஜராத் பூகம்பத்தின் போது ஆற்றிய மனிதநேயப் பெரும்பணிக்காக ஸ்பானிஷ் நாட்டுச் செஞ்சிலுவை வழங்கிய தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். ஜெர்மன் செஞ்சிலுவை 2003 ஆம் ஆண்டு இவர் ஆற்றிய சிறந்த சமூக சேவைக்காக விருது வழங்கிச் சிறப்பித்தது.

மருத்துவ சேவை, சமூக சேவை இவையிரண்டிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்வதிலேயே மகிழ்ச்சியைக் காணும் இந்த மனிதநேய மிக்க கொங்குக்குலமணிக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## திரு. S.D. சந்திரசேகர்

ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்களின் முன்னாள் செயலாளர் மற்றும் தலைவர் திரு. S. துரைசாமி கவுண்டர் – திருமதி லட்சுமியம்மாள் தம்பதியரின் மூத்தமகனாக **1951** ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம் செங்கோடம்பாளையத்தில் பிறந்தவர் திரு. S.D. சந்திரசேகர். இவர் ஆந்தை கூட்டத்தைச் சேர்ந்தவர்.

ஈரோட்டில் உள்ள செங்குந்தர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் B.A. (History) பட்டப்படிப்பை முடித்தார்.

கிராமப்புற ஏழை மாணவர்களுக்குக் கல்வி வசதி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு பாடுபட்டு கல்விப் பணியாற்றியவர் திரு. துரைசாமி கவுண்டர். தந்தையைப்போலவே திரு. சந்திரசேகர் அவர்களும் கல்விப் பணியாற்றுவதில் பெரும் ஈடுபாடு கொண்டு, இன்று எண்ணற்ற மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கிக் கொண்டிருக்கிறார். இன்று நாட்டிலுள்ள ஏராளமான கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் சிலவற்றைத்தான் லாபநோக்கம் கருதாது தரமான கல்விச் சேவையாற்றும் நிறுவனங்களாகக் கூறமுடியும். அத்தகைய கல்லூரிகளில் ஒன்றாக, தமிழகத்தின் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாக, வேளாளர் கல்வி நிறுவனங்கள் விளங்கி வருகின்றன என்பது கொங்கு வேளாளர் அனைவருக்கும் பெருமை சேர்க்கின்ற செய்தியாகும். இப்பெருமைக்கு முக்கியக் காரணமாக இருப்பவர் திரு. சந்திரசேகர் அவர்கள்.

ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி மற்றும் ஈரோடு வேளாளர் மெட்ரிகுலேசன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய நிறுவனங்களின்

செயலாளராகவும், தலைவராகவும் 1999 ஆம் ஆண்டு முதல் பொறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றி வருகிறார். 2001 ஆம் ஆண்டிலிருந்து ஈரோடு வேளாளர் தொழில் நுட்பம் மற்றும் பொறியியல் கல்லூரி, 2005 ஆம் ஆண்டிலிருந்து வேளாளர் பெண்கள் கல்வியியல் கல்லூரி, 2007 ஆம் ஆண்டிலிருந்து வேளாளர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் என இவரது கல்விச்சேவை வளர்ந்தோங்கி உள்ளது.

பெருந்துறையில் உள்ள விவேகானந்தா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியின் துணைத் தலைவராகவும் உள்ளார்.

பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதில் மிக்க ஆர்வம் கொண்டவர். அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்டப் பொதுச் செயலாளராய் இரண்டாண்டுகள் பணியாற்றியுள்ளார். மாவட்ட சட்ட உதவிக் குழுவின் உறுப்பினராய் உள்ளார். அமர்ஜோதி அறக்கட்டளையின் கௌரவத் தலைவராகவும் உள்ளார்.


இவருக்கு எல்லாவகையிலும் உற்ற துணையாயிருப்பவர் இவருடைய மனைவி திருமதி யோகலட்சுமி இத்தம்பதியருக்கு திரு. பாலசுப்பிரமணி என்ற மகன் உள்ளார். மருமகள் திருமதி கார்த்திகேயணி.

கொங்கு வேளாளர் இன மக்களில் விவசாயத்தை மட்டும் நம்பிப் பயிர்த்தொழில் புரிவோர் படும் இன்னல்கள் சொல்லிமாளாது. வேளாண்மை செய்து ஊர் மெச்சிட வாழ்ந்து, ஊர் மக்களுக்கெல்லாம் உதவி செய்திட்ட வேளாண்குடி மக்களின் நிலைமை இன்று மிகவும் கவலைப்படும் நிலையில் உள்ளது. இந்த நிலையில் விவசாயம் நமக்கு உகந்ததா என்ற கேள்வி அனைவரின் மனத்திலும் எழுந்துள்ளது.

இதற்கு விடிவு, வருங்கால சந்ததியருக்கு நல்ல கல்வி தருவதுதான் என உணர்ந்து, நம்முடைய சமுதாயச் சான்றோர்கள் சிலர் கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளனர். மிகத்தரமான கல்வியை அளித்து வருகின்றனர். நல்ல வேலைக்குச் செல்வதோ, தொழில் தொடங்குவதோ, வெளிநாடு செல்வதோ எதுவாயினும் நல்ல கல்விபெறுவதன் மூலமே சாத்தியமாகும். இந்த வகையில் சமுதாயச் சேவையாற்றிவரும் திரு. சந்திரசேகர் அவர்கள் அனைவரும்

பாராட்டும்படி செயலாற்றிக் கொண்டிருக்கிறார். தகுதி வாய்ந்த ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை அளித்தும், கட்டணம் ஏதுமின்றி இலவசக் கல்வி அளித்தும் வருகிறார். சிறந்த கல்விப் பணியாற்றிவரும் இவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## திரு. P. முத்துசாமி

திரு.ப. முத்துசாமி அவர்கள், ஈரோடு மாவட்டம் பெருந்துறைக்கு அருகில் உள்ள கோவில்பாளையத்தில் திரு. பழனிசாமி கவுண்டர்– திருமதி சீதாம்மாள் தம்பதியருக்கு **1946** ஆம் ஆண்டு மூத்த மகனாகப் பிறந்தார். ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் B.Sc., பட்டம் பெற்றார்.

**1969** ஆம் ஆண்டு பன்சாலி கெமிகல் நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதியாகப் பணியில் சேர்ந்து, **1972** ஆம் ஆண்டு சொந்தமாக "The Standard Chemicals" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். பல தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துக் குறித்த காலத்திற்குள் அனுப்பிவைத்தார். நேர்மையாகவும், திறமையாகவும், கடினமாகவும் உழைத்ததன் பயனாகத் தொழில் வளர்ந்தது. பலரது பாராட்டுகளும் குவிந்தன. **1982**ல் ONGC நிறுவனத்தின் பாராட்டைப் பெற்றார். **1998**ல் இவருடைய தொழில் சேவைகளைப் பாராட்டி மத்திய உள்துறை அமைச்சரிடமிருந்து Outstanding Service Award என்ற விருதினைப் பெற்றார்.

சாதாரண விற்பனைப் பிரதிநிதியாகத் பணியைத் தொடங்கி, படிப்படியாக முன்னேறி, சிறந்த முதல் தலைமுறை தொழிலதிபராய் உயர்ந்துள்ள இவரின் சாதனை கொங்கு இளைஞர்களுக்கு ஊக்கமும் தன்னம்பின்கையும் அளிக்கக்கூடியதாகும்.

கொங்குச் சமுதாயப் பணியிலும், கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியிலும் பெரிதும் நாட்டம் கொண்டு தன்னை அதில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர் இவர். சென்னையில் இவரைத் தேடிவரும் கொங்குச் சொந்தங்களுக்கு வேண்டிய

உதவிகளைத் தன்னாலியன்ற அளவுக்கு மகிழ்ச்சியுடன் செய்து வருபவர். கொங்கு நண்பர்கள் சங்கக் கட்டிட நிதிக்கு ரூ. 10,000 மதிப்புள்ள மரச்சாமான்களைக் கொடுத்துடன் ரூ. 7,500 தன்னுடைய பங்காகவும் கொடுத்துள்ளார்.

சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு இரசாயனப்பொருட்கள் விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும், தென்னிந்திய வர்த்தக சபையின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு பாரத ரத்னா விருது பெற்றமைக்காகப் பாராட்டுவிழா நடைபெற்றதில் இவருக்கு முக்கியப் பங்குண்டு. கொங்கு மாணவர்கள், அரசு மற்றும் தனியார் வேலைகளை எதிர்பார்க்காமல் சுயதொழில் தொடங்கி முன்னேற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திவரும் இவர் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தப் பாடுபட்டு வருகிறார்.


எங்கெங்கு வாய்ப்புகள் கிடைக்கிறதோ அங்கெல்லாம் முடிந்தவரை சமுதாய சேவை செய்து வரும் மனிதநேயம் கொண்டவர். கொங்கு நண்பர்கள் சங்க விதிகளில் சீர்திருத்தங்கள் செய்ததில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு. கொங்குச் சமுதாய வளர்ச்சியிலும், கொங்குச் சொந்தங்களுக்கு உதவி புரிவதிலும் பெரும் பங்காற்றி வரும் இவர் கடின உரைப்பாலும், திட்டமிட்ட செயல்பாடுகளாலும் தன்னை உயர்த்திக் கொண்ட கொங்கு மகனாகத் திகழ்கிறார் என்றால் அது மிகையல்ல. கொங்கு இளைஞர்கள் சுய தொழில்கள் தொடங்க வேண்டும். தொழிலில் முன்னேற வேண்டும். தொழிலில் லாபமீட்டி பொருள் சேர்த்து, அதில் ஒரு பங்கைச் சமுதாயத்திற்குச் செலவிட வேண்டும். சமுதாயச் சேவையாற்றிட வேண்டும்" என்ற கருத்தினை இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி வரும் இவர், அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகவே திகழ்கிறார்.

மறைந்த இவருடைய மனைவி திருமதி மனோன்மணி இவருடைய வளர்ச்சியில் உறுதுணையாக இருந்தவர். மகள் தேவி பிரியதர்சினி M.Sc., Nutrition இறுதியாண்டு படித்து வருகிறார். இவர் B.Sc., ல் கல்லூரி முதல்

மாணவியாக வந்து சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் விருதையும் பாராட்டையும் பெற்றவர். மகன் எம். ராஜசேகர் SRM பல்கலைக்கழகத்தில் B.Tech., (Genetic) படித்து வருகிறார்.

சிறந்த தொழிலதிபராகவும், சமுதாயப்பணி புரிபவராகவும் சாதனைகள் பல செய்த, செய்து வருகின்ற திரு. பி.முத்துசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



# Dr. S. பெருமாள்

சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டத்தில் உள்ள கவர்கல்பட்டி என்ற சிறிய கிராமத்தில் திரு. ப.சுப்புகவுண்டர் – திருமதி சு.பழனியம்மாள் தம்பதியருக்கு நான்காவது குழந்தையாக 1954 ஆம் ண்டு பிறந்தவர் இவர்.

புகுமுகப் படிப்பை (PUC) ஈரோடு வாசவி கல்லூரியிலும், B.Sc., (வேதியியல்) படிப்பை கோவை P.S.G. கலைக்கல்லூரியிலும், M.Sc., (வேதியியல்) படிப்பை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் முடித்தார். M.Sc., படிப்பில் முதல் இடத்தில தேர்ச்சி பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றார்.

1976 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1986 ஆம் ஆண்டு முனைவர் பட்டம் (Ph.D,) பெற்றார். 1986 ஆம் ஆண்டு இணைப்பேராசிரியராகவும், 1994ல் பேராசிரியராகவும், 2003ல் கரிமவேதியியல் துறையின் தலைவராகவும், வேதியியல் துறையின் ஒருங்கிணைப்பாளராகவும் பணிபுரிந்தார். 2003 ஆம் ஆண்டிலிருந்து கல்விப்பேரவை மற்றும் ஆட்சிப்பேரவை உறுப்பினராகவும், 2007ல் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

அமெரிக்காவில் புளோரிடா பல்கலைக்கழகத்தில் சுமார் இரண்டு வருடங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டார். ஸ்பெயின் நாட்டின் கம்ப்ளுடென்சே என்ற பல்கலைக்கழகத்தில் புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்து பற்றிய ஆராய்ச்சி மேற்கொண்டார்.

இங்கிலாந்து வேல்ஸ் பல்கலைக்கழகம், பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியா ஸ்டேட் பல்கலைக்கழகம்

ஆகிய பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பேராசிரியர்களுடன் கூட்டு ஆராய்ச்சிப்பணி மேற்கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். கிட்டத்தட்ட 115 ஆராய்ச்சி கட்டுரைகள் அறிவியல் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கழகம் (CSIR) இவரது ஆராய்ச்சியின் பயனாக, கருகாந்த ஒத்திசைவு (Nuclear Magnetic Resonence) கருவியை வாங்கவும், அதைப்பராமரிக்கவும் ரூ. 1.16 கோடி வழங்கியுள்ளது. பல்வேறு கல்லூரிகளிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் இக்கருவியின் மூலம் ஆராய்ச்சி செய்து பயன்பெற்றுள்ளனர். கருகாந்த ஒத்திசைவு பற்றி ஜெர்மனியில் பிரசுரமான ஸ்பிரிங்கர் வெர்லாக் புத்தகத்தில் ஒரு பெரிய அத்தியாயத்தை முனைவர் பெருமாள் எழுதியுள்ளார்.

உலகப் புகழ் வாய்ந்த விஞ்ஞானிகளை மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு விருந்தினராக வரவழைத்து, அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளைப் பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்தவர் இவர். 2005 ஆம் ஆண்டு புகழ்பெற்ற 15 விஞ்ஞானிகளை வரவழைத்து, பசுமை வேதியியல் செயல்முறை விளக்க கருத்தரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்திக்காட்டினார்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், முனைவர் பட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் நூல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் பணியை இவர் செவ்வனே செய்து வருகிறார். வெளிநாட்டில் எல்ஸ்வியிர் பதிப்பகத்திற்கு ஏழு அணுக்களைக்கொண்ட கலப்புவளைய சேர்மங்களைப்பற்றிய தொகுப்பு ஒன்றை அண்மையில் இவர் எழுதியுள்ளார். இவரது வழிகாட்டுதலில் 10 மாணவர்கள் முனைவர் பட்டம் (Ph.D) பெற்றுள்ளனர். மேலும் 12 பேர் விரைவில் முனைவர் பட்டம் பெற உள்ளனர். இவரது பல மாணவர்கள் தொழிற்சாலைகளிலும், கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கூடங்களிலும் சிறந்த பணியாற்றி வருகின்றனர்.


மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தில் செயற்குழு உறுப்பினர் முதல் தலைவர் வரை பல்வேறு பொறுப்புகளை ஏற்று ஆசிரியர்களுக்கு நற்பணி ஆற்றியுள்ளார். அனைத்துத் தமிழகப் பல்கலைக்கழகங்கள் சங்கத்

தலைவராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

தான் இருக்கும் ஜெயநகர் குடியிருப்போர் சங்கத்தின் செயலாளராக இருந்து நற்செயல்கள் பல ஆற்றியுள்ளார்.

ஆசிரியர் பணி புனிதமானது; மகத்தானது; உலகளவில் சாதனை புரிந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கும் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் எஸ்.பெருமான் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர். கே.எஸ்.கே. வேல்மணி

1944 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம் வேலம்பாளையம் கிராமத்தில் பனங்காடன் குலத்தைச் சேர்ந்த திரு. கே.எஸ்.குமாரசாமி கவுண்டர் – திருமதி பாவாத்தாள் தம்பதியரின் ஒரே மகனாகப் பிறந்தவர் இவர்.

பள்ளிக்கல்வியை மொடக்குறிச்சி உயர்நிலைப்பள்ளியிலும், புகுமுக வகுப்பை ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியிலும், B.Sc., பட்டப்படிப்பை சென்னை லயோலா கல்லூரியிலும் படித்தார். ஓராண்டுக் காலம் ஈரோடு வாசவி கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.

பின்னர் சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.ஏ. குற்றவியல் (Criminology & Forensic Science) பட்டப்படிப்பில் பல்கலைக்கழகத்தின் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். 1970 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.லிட். பட்டமும், பின்னர் (Ph.D.) முனைவர் பட்டமும் பெற்றார். இவைதவிர வரலாற்றில் எம்.ஏ.பட்டமும், B.L. பட்டமும் பெற்றுள்ளார். Diploma in Statistics (புள்ளியியல் பட்டயம்), Postgraduate Diploma in Journalism and Mass Communication (இதழியலில் முதுநிலை பட்டயம்), Certificate in French Language, Diploma in Anthropology முதலான பட்டங்களும், பட்டயங்களும் பெற்றுப் பல்கலை வல்லுனராகத் திகழ்கிறார்.

இவர் மாணவராக இருந்தபோது கொங்கு மாணவ அமைப்பை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு முனைவர் தாமோதரன், முனைவர் குமாரவேலு மற்றும் கோபி சுப்பிரமணியம் முதலானோருடன் இணைந்து 1971 ஆம் ஆண்டு கொங்கு மாணவர் அமைப்பை உருவாக்கினார். சென்னை கொங்கு

நண்பர்கள் சங்கத்தில் 1971 ஆம் ஆண்டு முதல் செயற்குழு உறுப்பினராகவும், 1976 ஆம் ஆண்டு முதல் இணைச்செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். கொங்குநாடு இல்லத்திற்கான கட்டிடம் வாங்குவதில் இவர் பெரும் பங்காற்றினார். கட்டிட நிதி திரட்டவும் உறுதுணையாக இருந்தார்.

1975 ஆம் ஆண்டு கோவையில் மாநில கொங்கு மாணவர் மாநாட்டை நடத்தும் பொறுப்பாளர்களாக பி.டி.சி. நிறுவனங்களின் தலைவர் அமரர் திரு.கே.ஆர்.மாரப்பன் அவர்களும், திரு. வேல்மணி அவர்களும் மிகச்சிறப்பாகப் பணியாற்றினர். திரு. வேல்மணி மாணவர் மாநாட்டுக்குத் தலைமையேற்று நடத்தினார். மாநாட்டிற்கு முன்னதாக கொங்குச் சமுதாய மாணவர்கள் பங்கேற்ற ஒரு மாபெரும் ஊர்வலம் இவரது தலைமையில் நடந்தது. கொங்குச் சமுதாயம் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாநாட்டில் தான் வலியுறுத்தப்பட்டு கொங்கு சமுதாயத் தலைவர்களின் கவனத்தையும், அரசின் கவனத்தையும் ஒருங்கே ஈர்த்தது.

கொங்குச் சமுதாயம் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்ட பிறகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் பொருட்டு நடந்த மாபெரும் விழாவில், கலைஞர் அவாகளால் மிகவும் பாராட்டப்பட்ட பெருமை கொண்டவர், திரு.வேல்மணி அவர்கள்.

1982 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டுவரை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கச் செயலாளராகப் பணியாற்றினார்.

கொங்குச் சமுதாய வெள்ளிவிழா இல்லக்கட்டிடம் கட்ட நிதி வசூல் செய்ததில் பெரும் பங்காற்றினார். இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள கொலைகாரர்களைப் பற்றிய ஆராய்ச்சி நூல் விரையில் வெளிவர உள்ளது. இவர் தனது அரசுப்பணிக்காலத்தில் மாவட்டங்களைப் பற்றிய அனைத்துச் செய்திகளும் நிறைந்த மாவட்ட விவரச்சுவடிகளுக்குப் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

இவருடைய சமுதாயப் பணிகளுக்குத் தோள் கொடுத்தவர், இறைவனடி சேர்ந்துவிட்ட திருமதி சரசுவதி அவர்கள். இவரது மகன் பொறியாளர் திரு. அரவிந்த்

சொந்தமாக தொழில் தெடங்கிநடத்தி வருகிறார். மருமகள் திருமதி வீணா அரவிந்த். இவரது மகள் மென்பொருள் பொறியாளர் அனிதா; மருகர் திரு. சரவணன்.

கொங்குச் சமுதாயத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பாடுபட்டவரும், கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவருமான திரு.வேல்மணி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## டாக்டர் (திருமதி) R. ஞானம்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்'

என்று வேளாண் தொழிலின் பெருமையையும் சிறப்பையும் சொல்லியுள்ளார் வள்ளுவர் பெருமான். வேளாண்மைத் துறையில் உயர்கல்வி கற்று வேளாண் கல்விப்பணியில் ஈடுபட்டுச் சாதனைகள் பல செய்து ஆணுக்குப் பெண் எந்த வகையிலும் சளைத்தவரில்லை என்பதை வேளாண்மைத் துறையிலும் நிரூபித்து வருபவர் டாக்டர் (திருமதி) ஆர். ஞானம் அவர்கள்.

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டத்திலுள்ள பட்டணம் கிராமத்தில் திரு.இராமசாமி – திருமதி தேவாயி தம்பதியருக்கு 1963 ஆம் வருடம் பிறந்தவர் டாக்டர் ஞானம். இளநிலை பட்டப்படிப்பை 1984 ஆம் ஆண்டில் வேளாண்மையிலும், முதுநிலைப்பட்டப்படிப்பை 1987 ஆம் ஆண்டு தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறையிலும், முனைவர் படிப்பை (Ph.D.) உயிர்தொழில் நுட்பத்துறையிலும் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் முடித்துள்ளார்.

முதுநிலைப் பட்டப்படிப்பின்போது புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (ICAR) நடத்திய தேர்வில் தேசிய அளவில் நான்காம் இடத்தைப் பெற்று இனிப்புச் சோளத்தில் திசு வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சியை வெற்றிகரமாக முடித்தார். முனைவர் (Doctorate) படிப்பில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் 1998 ஆம் ஆண்டின் மிகச்சிறந்த உயிர்தொழில் நுட்ப ஆராய்ச்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முனைவர் குருதேவ்குஷ் தங்கப் பதக்கம் இவருக்கு வழங்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டுவரை கேரள மாநிலத்தின் கொச்சியில், ஆசியாவிலேயே முதன் முறையாக A.V Thomas நிறுவனத்தால் நிறுவப்பட்ட திசு வளர்ப்பு ஆய்வகத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றியுள்ளார். 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உதவிப்பேராசிரியராகச் சேர்ந்து கடந்த பத்தொன்பது ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறார். தற்போது உயிர் தொழில் நுட்பப்பேராசிரியராக மதுரையில் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றி வருகிறார்.


19 ஆண்டுகாலப் பணியில் 50க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி முடிவுகளைக் கட்டுரைகளாக, தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கு மற்றும் பதிப்பகங்கள் மூலம் வெளியிட்டுள்ளார். பல பல்கலைக்கழகங்களின் உயர்மட்டக் குழு உறுப்பினராகவும், தேர்வுகளுக்காக சிறப்புத் தேர்வாளராகவும் பணியாற்றிவருகிறார்.

திசு வளர்ப்பில் சிறந்த நிபுணராக விளங்கிவரும் இவர் வாழையில் சிசு வளர்ப்பின் மகத்துவத்தை எடுத்துரைக்க, 4000 க்கும் மேற்பட்ட நோயற்ற வாழைக்கன்றுகளை உருவாக்கி தேசிய அளவிலான விவசாயக் கண்காட்சிகளில் வைக்கவும், வயல்வெளி ஆய்வுகளில் சோதனையிடவும் முக்கியப்பங்கு ஆற்றியுள்ளார். கடந்த 15 ஆண்டுகளாக எண்ணற்ற கல்லூரி மாணவர்களுக்குத் திசு வளர்ப்பில் உயிர்தொழில் நுட்பப் பயிற்சி அளித்துள்ளார். 150க்கும் மேற்பட்ட வேளாண் அலுவலர்களுக்கும், வங்கித்துறை அலுவலர்களுக்கும் திசு வளர்ப்பு முறைபற்றி பயிற்சியளித்துள்ளார்.

இவரது கணவர் திரு. கே. குணசேகரன் 21 ஆண்டுகள் தென்னக ரெயில்வேயில் பணிபுரிந்துவிட்டு விருப்ப ஓய்வு பெற்றுத் தற்போது சொந்தமாகத் தொழில் செய்துவருகிறார். இத்தம்பதியருக்கு சர்மிளாதேவி, காருண்யாதேவி என்ற இருமகள்கள் உள்ளனர்.

வேளாண் கல்வித் துறையில், குறிப்பாக உயிர்தொழில் நுட்பத்துறையில் மிகச்சிறப்பாக பணியாற்றி, சாதனைகள் பல புரிந்து பல நிறுவனங்களின் மற்றும் பல்கலைக்கழகங்களின் பாராட்டும், அங்கீகாரமும் பெற்றுள்ள இவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



### திரு. M. சிவசண்முகம்

1961 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் மோஞ்சனூர் பசுபதிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துசாமி – திருமதி கோவிந்தம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் திரு. M. சிவசண்முகம்; இவர் தேவேந்திர குலத்தைச் சேர்ந்தவர்.

எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் எட்டாம் வகுப்புவரை தொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய மத்தியப் பள்ளியிலும், 9 முதல் 11 வது வகுப்புவரை தென்னிலை கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியிலும் படித்தார். புகுமுக வகுப்பை (P.U.C) சேலம் அரசு கலைக்கல்லூரியிலும், B.E. பட்டப்படிப்பை கோவை C.I.T. கல்லூரியிலும், Master of Planning முதுநிலைப் பட்டப்படிப்பைத் தலைநகர் டில்லியில் உள்ள School of Planning and Architecture நிறுவனத்திலும் வெற்றிகரமாக முடித்தார். பள்ளியிலும் கல்லூரிகளிலும் படித்த காலத்தில் சிறந்த மாணவர்களுள் ஒருவராய்த் திகழ்ந்ததுடன் பல பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

கோவை கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் திருப்பூரிலுள்ள நஞ்சப்ப தொழில்நுட்ப நிறுவனத்தில் (Nanjappa Institute of Technology) விரிவுரையாளராய்ப் பணியில் அமர்ந்தார். தொடர்ந்து ஆப்பக்கூடலில் அமைந்துள்ள சக்தி பாலிடெக்னிக் கல்லூரியில் சில மாதங்கள் பணியாற்றினார். முதுநிலைப் பட்டம் (M. Planning) டில்லியில் படித்துமுடித்தவுடன் டில்லியிலேயே ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தின் ஆலோசகராகப் பணியாற்றினார். 1988 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசின் சென்னை மாநகர வளர்ச்சி ஆணைக்குழுவின் (CMDA) திட்ட அலுவலராய்ச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

நகர்ப்புற அபிவிருத்தியும் வளர்ச்சியும் இன்று முக்கிய விவாதப் பொருளாகிவிட்ட கால கட்டத்தில் இத்துறையில் நிபுணத்துவம் பெற்று, சென்னை நகரின் வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்று, தன்னுடைய சிறந்த பணியால் பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

ராஜஸ்தான் மாநில அரசின் ஜெய்ப்பூர் நகர வளர்ச்சி ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட நகர அபிவிருத்தித்திட்ட வடிவமைப்புப் போட்டியில் கலந்துகொண்டு விருதும் பரிசும் பெற்றுள்ளார். இவர் சீன நாட்டில் உள்ள ஹாங்காங் நகரத்தில் நடைபெற்ற சீற்றங்கள் மேலாண்மை மற்றும் நீடித்த வளர்ச்சி (Disaster Management and Sustainable Development) என்ற கருத்தரங்கில் UNDP Fellowship பெற்று கலந்து கொண்டு சிறப்புப் பயிற்சிப் பெற்றுள்ளார்.

நாடெங்கிலும் இருந்து 20 வல்லுனர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜெர்மனி நாட்டில் நடைபெற்ற விரிந்த சுற்றுச்சூழலுடன் திட்டமிடுதல் (Spatial Environmental Planning) என்ற சிறப்புப் பயிற்சி முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த இருபதில் ஒருவராகச் சென்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் இவர்.

இங்கிலாந்து நாட்டின் கேம்பிரிட்ஜ் நகரில் நடைபெற்ற வெள்ளச்சீற்ற மேலாண்மை (Flood Plain Management) என்ற பயிற்சி முகாமிலும் கலந்துகொண்டு தன் தகுதிகளையும் திறமைகளையும் செவ்வனே வளர்த்துக்கொண்டார்.


டில்லியிலுள்ள மனிதத்தீர்வு மேலாண்மை நிறுவனம் (Human Settlement Management Institute) என்ற நிறுவனத்திற்கு மூன்று பெரிய ஆய்வுகளை நடத்தி முடித்துள்ளார் என்பது இவரது திறமைக்கும் புலமைக்கும் சான்றாகத் திகழ்கிறது.

Institute of Town Planning, Institution of Engineers, Indian Society for Technical Education போன்ற அமைப்புகளில் உறுப்பினராக உள்ள சிறப்புப் பெற்றவர் இவர். 2005ம் ஆம் ஆண்டு TPI யெற்குழு உறுப்பினராய் இருந்துள்ளார். TPI ன் தமிழ்நாடு பிரிவின் செயலாளராகப் பலமுறை இருந்துள்ளார். CIT – 84 Batch அறக்கட்டளையின் செயலாளராகப் பலமுறை இருந்துள்ளார்.

நகர மேம்பாட்டுப் பணியில் நாளும் உழைத்து வரும் இவருக்கு திருமதி சாந்தி என்ற மனைவியும், சிபி பிரணவ் என்ற மகனும் உள்ளனர். கொங்குச் சமுதாய வளர்ச்சியில் பெரும் ஆர்வம் கொண்டு, சமுதாயப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

நகரமேம்பாட்டுப்பணியில் சிறந்து விளங்கிச் சாதனைகள் புரிந்துள்ள திரு.எம்.சிவசண்முகம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. E.T. இராஜமாணிக்கம்

கால்வாய் தந்த கொங்குக் கோமகன் காலிங்கராயன் பிறந்த கனகபுர கிராமத்தில் 1950 ஆம் ஆண்டு சாத்தந்தை குலத்தைச் சேர்ந்த திரு. திருமலைசாமிக் கவுண்டர் - திருமதி திருமாயம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் இவர்.

கொங்குச் சமுதாயச் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவர் படித்தது S.S.L.C வரை மட்டுமே என்றாலும் கொங்குச் சமுதாயச் சேவையில் இவர் டாக்டர் பட்டம் பெற எல்லாவகையிலும் தகுதியுள்ளவர் என்றால் அது மிகையாகாது, ரியல் எஸ்டேட் மற்றும் ஸ்கீரின் பிரிண்டிங் தொழில் செய்துவரும் இவர் பொது வாழ்வில் பெரும் பங்கு கொண்டு தன்னாலியன்ற அளவுக்கு மக்களுக்குத் தொண்டாற்றி வருபவர்.

ஈரோடு ஸ்க்ரீன் பிரிண்டர்ஸ் அசோசியேசன் செயலாளராகவும், தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார். தமிழ்நாடு டையிங் மற்றும் பிரிண்டிங் உரிமையாளர் சங்கத்தின் துணைத்தலைவராகப் பதவி வகித்துள்ளார். ஈரோடு கொங்கு வேளாளர் இளைஞர் சங்கத்தை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர் இவர். இந்தச் சங்கத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ள இவர், 2003 ஆம் ஆண்டு முதல் அதன் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

கொங்கு சித்த மருத்துவ மையம், கொங்கு திருமண தகவல் நிலையம், கொங்கு வேலைவாய்ப்பு தகவல் நிலையம் ஆகியவைகளை ஏற்படுத்தி, கொங்கு சமுதாயத்திற்குப் பெருஞ்சேவையாற்றியுள்ளார். ஐ.ஏ.எஸ். (I.A.S.) தேர்வில் வெற்றி பெற்ற கொங்குச் சமுதாய மாணவர்களுக்குப் பாராட்டு விழா, சமுதாயச்

சான்றோர்க்குப் பாராட்டுவிழா, கொங்கு மாணவச் செல்வங்களுக்கு கல்விநிதி உதவி வழங்குதல், கொங்குச் சமுதாய மக்களுக்கு மருத்துவ நிதி உதவி வழங்குதல், கொங்கு மாவீரன் தீரன் சின்னமலை நினைவு நாள் விழா நடத்துதல், கொங்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் போன்றவை இவரின் சமுதாயச் சேவைகளில் அடங்கும்.

பொதுமக்களுக்குக் கோடைக் காலங்களில் நீர்மோர் வழங்குதல், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்குக் கல்வியை ஊக்குவிக்க முதல்வன் விருது வழங்குதல், வசதியற்ற ஏழை மக்களுக்கு இலவசத் திருமணம் நடத்துதல், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்த மனிதநேயத் தொண்டு, பொதுமக்களுக்கு இலவச கண் சிகிச்சைமுகாம் நடத்துதல், பொதுமக்களுக்கு இரத்த தானமுகாம் நடத்துதல், சுற்றுப்புறச் சூழ்நிலைகாக்க மரக்கன்றுகள் நடுதல் போன்றவை இவர் ஆற்றிவரும் பொதுச்சேவைகளாகும்.

கொங்குச் சமுதாயத்தில் தொடரும் பொருளாதார முன்னேற்றமின்மை, கல்வியறிவு பெறுவதிலும் அரசு வேலைவாய்ப்பு பெறுவதிலும் பின்தங்கிய நிலை போன்றவை மேலும் நீடிக்காமல் இருக்க, தான் சார்ந்துள்ள கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம் மூலமாக, கொங்குச் சமுதாய மக்களுக்கு மன நிறைவுடனும் மனித நேயத்துடனும் சேவைகள் புரிவதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்பவர் இவர்.

‘கொங்கினமே விழித்தெழு’ என்று சமுதாய இனைஞர்களுக்கும், மகளிருக்கும், மாணவ, மாணவிகளுக்கும் விழிப்புணர்ச்சியூட்டும் வகையில் விழாக்கள், கருத்தரங்குகள், சந்திப்புகள் முதலியன நடத்திவரும் இவர் கொங்கின முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து பல்வேறு கொங்கு அமைப்புகளுடன் தொடர்புகொண்டு வேண்டுகோள்களை விடுத்தும், நடவடிக்கைகள் எடுத்தும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். ஈரோடு கொங்கு தமிழ்ச்சங்கப் பணிகளில் ஈடுபட்டு வரும் இவர் ஒரு தமிழ் ஆர்வலர்.

இவருடைய பொதுச்சேவைக்கும், சமுதாயச் சேவைக்கும் ஊக்கமளிப்பவராகவும், உறுதுணையாகவும் உள்ளவர் இவருடைய மனைவி

திருமதி இரா. வசந்தி. இவருடைய மகள்கள் திருமதி எஸ். வெண்ணிலா B.A., செல்வி இரா. ஜெயவாணி MFC மற்றும் மருமகன் திரு. எஸ். செந்தில்குமார், B.A. ஆகியோர் இவருடைய சமுதாயச் சேவைக்குத் துணைநிற்பவர்கள்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற முதுமொழிக்கேற்பச் சமுதாயத் தொண்டாற்றி வரும் திரு. E.T. இராஜமாணிக்கம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## திருமதி ருக்மணி மாரப்பன்

சேலம் மாவட்டம் மேச்சேரியில் தூரன் கூட்டத்தைச் சேர்ந்த திரு. செங்கோட கவுண்டர் – திருமதி முத்தாயம்மாள் தம்பதியருக்கு 1946 ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தவர் திருமதி ருக்மணி மாரப்பன் ஆவார். இவர் B.Sc., பட்டப்படிப்பை திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் முடித்து, பிறகு B.Ed. பட்டமும் பெற்றார். இவர் 1969 ஆம் ஆண்டு திரு. K.R. மாரப்பன் அவர்களை வாழ்க்கைத்துணையாகக் கரம் பிடித்தார்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தை உருவாக்கியவர்களில் மிக முக்கியமாக விளங்கியவர் திரு. மாரப்பன் அவர்கள். கொங்குச் சமுதாய வளர்ச்சிக்காகவும், கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்காகவும் தன் வாழ்நாளெல்லாம் அயராது பாடுபட்டு உழைத்தவர், திரு. மாரப்பன் அவர்கள்

திரு. K.M. இராமசாமி கவுண்டர் – திருமதி காளியம்மாள் தம்பதியருக்கு 1932 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம், கோபிவட்டம், குட்டிப்பாளையம் என்னும் கிராமத்தில் பிறந்த திரு. மாரப்பன், B.A., மற்றும் B.L., பட்டங்களைப் பெற்றார். 1958ஆம் ஆண்டு சென்னை திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி தனிப்பயிற்சிக் கல்லூரியைத் தொடங்கினார். பின்னர் 1961 ஆம் ஆண்டு மாரா நர்சரி பள்ளியைத் தொடங்கினார். அந்தக் காலகட்டத்தில் திரு. கே.எம். சென்னியப்பன், மூத்த வழக்கறிஞர் இரா. காந்தி, பேராசிரியர் பழனிசாமி, தேவண்ண கவுண்டர், மீசை பெருமாள், C.K. இராமசாமி மற்றும் திரு. மாரப்பன் ஆகியோர் இணைந்து தோற்றுவித்ததுதான் இன்று ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர் ஊன்றி நிற்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்.

சங்கத்தின் துவக்க கால கட்டத்தில் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்துவதற்குச் சொந்த இடமோ, வாடகை இடமோ இல்லாத நிலையில் திரு. மாரப்பன் அவர்கள் தான், தன்னுடைய பள்ளியில் கூட்டம் நடத்த முன்வந்தார். ஏறத்தாழ 15 ஆண்டுகள் கொங்கு நண்பர்கள் சங்க மாதாந்திரக் கூட்டங்கள் இவருடைய பள்ளியில் விருந்தோம்பலுடன் நடைபெற்றன. திரு.மாரப்பன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு கோவையில் மிகப்பெரிய கொங்கு மாணவர்கள் மாநாட்டை பொறுப்பாளராக இருந்து வெற்றிகரமாக நடத்திக்காட்டினார். கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றதில் இவருக்குப்பெரும் பங்குண்டு.

1975 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ந்தார். கோவையில் நடந்த மிகப் பிரமாண்டமான நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திரு. மாரப்பனுக்கு சால்வை அணிவித்து, பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பாடுபட்டு உழைத்த முன்னணியினரில் திரு. மாரப்பனும் ஒருவர் என்பதைக் குறிப்பிட்டார்.

திரு. மாரப்பன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட் (Senete) உறுப்பினராகவும், அகாடமிக் கவுன்சில் (Academic Council) உறுப்பினராகவும் கல்விப்பணியாற்றினார். நர்சரி பள்ளிகளின் கூட்டமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார். கல்விப்பணி மற்றும் சமுதாயப்பணியில் ஈடுபட்டு மிகச்சிறப்பாகச் செயல்பட்டு எல்லோர் இதயங்களையும் கவர்ந்த இந்தக் கொங்குக்குலமணி, 1980 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவர் கொங்குச் சமுதாயத்திற்கும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும் ஆற்றிய சேவை எல்லோர் மனத்திலும் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

கணவரின் அகால மறைவுக்குப்பின், உள்ளம் துயருற்றாலும், நெஞ்சில் உறுதி கொண்டு கணவர் காட்டிய பாதையில் நடைபோட்டு இன்று மூன்று பள்ளிகளை வெற்றிகரமாக நடத்திவருகிறார். திருமதி ருக்மணி அயராத உழைப்பு, மனித நேயம், நிர்வாகத்திறன், விருந்தோம்பல் போன்ற சிறந்த பண்புகளின்


உறைவிடமாகத் திகழும் இவர்.

> "இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
> இடும்பை படாஅதவர்"

என்ற குறளுக்கு உதாரணமாக விளங்குகிறார். இவருடைய மகன் பொறிஞர் திரு.எம்.இராமச்சந்திரன் B.E., M.S., (USA) அமெரிக்காவில் மென்பொருள் தொழிலைச் சிறப்பாக நடத்திவருகிறார். மனைவி திருமதி அனிதா, மகன் நேத்தன், மகள் நேகா ஆகியோருடன் சிகாகோ நகரில் வசித்து வரும் இவர் வீட்டில், கொங்குச் சொந்தங்கள் அவ்வப்போது கூடி மகிழ்கின்றனர். அப்பாவுக்குத் தப்பாது பிறந்த பிள்ளையல்லவா!

கல்விப்பணியிலும், சமுதாயப்பணியிலும் பெருஞ்சாதனைகள் புரிந்த அமரர் திரு.மாரப்பன் அவர்களைப் போற்றி வணங்கி, அவருடைய சாதனைகளைத் தொடர்ந்திடும் திருமதி ருக்மணி மாரப்பன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## திரு. M. குமாரகவுண்டர்

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்திலுள்ள கூனக்காபாளையம் கிராமத்தில் 1939ஆம் ஆண்டு கண்ணங் கூட்டத்தைச் சேர்ந்த திரு. முத்துக்கவுண்டர் – திருமதி காளியம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகனாய்ப் பிறந்தவர் இவர்.

புகுமுக வகுப்பை ஈரோடு சிக்கைய நாய்க்கர் கல்லூரியிலும், B.E., (Civil) பட்டப்படிப்பை கோவை P.S.G. தொழில் நுட்பக் கல்லூரியிலும் முடித்தார். சென்னை மாணவர் மன்றம் நடத்திய தமிழ்த்தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்றுப் பரிசு பெற்றார்.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடம் கோவையில் உள்ள Pioneer Engineering Corporation என்ற தனியார் நிறுவனத்தில் உதவிப்பொறியாளராகப் பணியில் சேர்ந்தார். சக்தி சுகர்ஸ் ஆப்பக்கூடல், லட்சுமி மெசின் ஒர்க்ஸ் பெரிய நாய்க்கன் பாளையம், HMT கலமசேரி (கேரளா) ஆகிய நிறுவனங்களின் கட்டுமானப்பணியில் இவரது பங்கு முக்கியமானதாகும். பிறகு எண்ணூர் அனல் மின் திட்டத்தின் கட்டுமானப்பணியில் சுமார் பத்து ஆண்டுக் காலம் பணியாற்றினார். அதன்பின்னர் Sampoorna Structural Works என்ற பெயரில் சொந்தமாக ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து எண்ணூரிலேயே 1975 ஆம் ஆண்டுவரை தொழில் செய்து வந்தார்.

1976 ஆம் ஆண்டு திருச்சி BHEL நிறுவனத்தில் ஒப்பந்தப்பணிகள் (Contracts) எடுத்து பலவற்றையும் வெற்றிகரமாக செய்து முடித்தார். 1981 ஆம் ஆண்டு முதல், திருச்சி துவக்குடி தொழிற் பேட்டையில் Altec Fabricators என்ற தொழிற்சாலையை நிறுவி, BHEL நிறுவனத்திற்குத் தேவையான Boiler Compo-

nents, Supporting Structures, Ductings போன்றவைகளை நல்ல தரத்துடன் செய்து வருகிறார். தனது மகன் கே.ரமேஷ் B.E., (Mech) படிப்பு முடித்து வந்ததும் அவரையும் தன் நிறுவனத்தில் பங்குதாரராகச் சேர்த்துக்கொண்டு படிப்படியாக உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி தற்போது Windmill Towers செய்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதில் சுமார் 200 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். BHEL Township அருகில் RKR Jewellers என்ற நகைக்கடையையும் திறம்பட நடத்திவருகிறார்.

திருவரம்பூர் அரிமா சங்கத்தின் தலைவர் உட்பட பல பொறுப்புகளை ஏற்று 20 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப்பகுதியில் உள்ள நலிவடைந்த மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறார். BHEL சிறு தொழில் அதிபர்கள் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். சிறுதொழில் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வந்துள்ளார்.

திருச்சி கொங்கு நண்பர்கள் சங்கத்தலைவராகப் பொறுப்பேற்று பலரும் பாராட்டும் வகையில் சமுதாயப் பணியாற்றியுள்ளார். கொங்குப் பேரவையின் திருச்சி மாவட்டத் தலைவராகப் பொறுப்பேற்று இன்றுவரை அந்தப்பொறுப்பில் இருந்து கொண்டு மிகச்சிறப்பான முறையில் கொங்குச் சமுதாய வளர்ச்சிபணிகளை ஆற்றிவருகிறார். தம்பியுடையான் படைக்கு அஞ்சான் எனக் கொங்குப் பேரவைத் தலைவர் திருச்சி திரு.ஆர். தேவராஜன் குறிப்பிடுவது இவரைத்தான்.

தன்னம்பிக்கையுடன் சொந்தத் தொழில் ஆரம்பித்து கடின உழைப்பு, தொழில்திறமை, நிர்வாகத்திறன் ஆகியவற்றின் துணை கொண்டு படிப்படியாக முன்னேறி இன்று பல தொழில்களை வெற்றிகரமாக நடத்திவருவது; அரிமா சங்கம், சிறுதொழில் உரிமையாளர் சங்கம் ஆகியவற்றில் தலைவராகப் பொறுப்பேற்று பலரும் போற்றும் சமுதாயப்பணிகள் ஆற்றியது; கொங்கு இன உணர்வுடன் பல கொங்கு அமைப்புகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு, இன்றும் திருச்சி மாவட்டப் பேரவைத் தலைவராகப் பணியாற்றுவது போன்றவை இவரது சாதனைகளில் குறிப்பிடாத் தக்கனவாகும். குமாரகவுண்டர் என்ற பெயரில் உள்ள

‘கவுண்டர்’ இவரது இன உணர்வுக்குத் தக்க சான்றாக உள்ளது.

இவரது மனைவி பெயர் திருமதி சம்பூரணம். கணவரது வெற்றிகளுக்குத் துணைநிற்பவர். மகன் கே.ரமேஷ் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். இருவரும் திருமணமாகி வெளிநாட்டில் குடும்பத்துடன் உள்ளனர்.

சிறந்த தொழிலதிபராகவும், சிறந்த வகையில் சமுதாயப்பணிகள் ஆற்றிவருபராகவும் உள்ள இவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## டாக்டர் (திருமதி) சித்ராதேவி ஜெகநாதன்

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சாமிநாதபுரம் கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரரும், காந்தியவாதியுமான திரு. தொ.சா. ஆறுமுகம் – திருமதி லட்சுமி அம்மாளுக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர் இவர். மொடக்குறிச்சி அரசுப்பள்ளி மற்றும் ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் பள்ளிப்படிப்பை முடித்தவுடன் கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் B.Sc., மனையியல் பட்டப்படிப்பை முடித்தார்.

1982 ஆம் ஆண்டு கோபி, வெள்ளாளப்பாளையத்தைச் சேர்ந்த பல் மருத்துவர் V.S. ஜெகநாதன் அவர்களுடன் திருமணம் நடைபெற்றது. 1984 ஆம் ஆண்டு பெண் குழந்தை பிறந்த சமயம் இவரது கணவர் திடீரென்று உயிர்நீத்தார். கணவரது மறைவு இவருக்குச் சொல்லொணாத் துயரத்தையும், மனவேதனையையும் அளித்தது.

துயரத்தை நெஞ்சில் தாங்கிக்கொண்டும், குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், மனித வாழ்வே பிறருக்குச் சேவை செய்வதற்காகத்தான் என்ற சான்றோர் கூற்றைத் தாரகமந்திரமாகக் கொண்டும் விதவைகளுக்கான இட ஒதுக்கீட்டில் 1985 ஆம் ஆண்டு கோவை மருத்துவக் கல்லூரியில் MBBS படிக்க இடம் கிடைத்து சேர்ந்தார். அப்போது அவரது பெண் குழந்தைக்கு வயது ஏழு மாதமே. 1991 ஆம் ஆண்டு மருத்துவப்படிப்பை முடித்தார். சென்னை Mediscan நிறுவனத்தில் ஸ்கேன் பயிற்சியையும் பெற்றார். 1997 ஆம் ஆண்டு தமிழக அரசுப்பணியில் அம்மாபேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராகப் பொறுப்பேற்றார்.

இவர் பணியில் சேர்ந்தபோது தினமும், சுமார் 25 பேர்கள் தான் வெளிநோயாளிகளாக வந்துகொண்டு இருந்தனர். இவரது சீரிய முயற்சியாலும், அரிய சேவையாலும் தினமும் சுமார் 250 பேர் வெளிநோயாளிகள் பிரிவில் சிகிச்சைப்பெற்றுச் சென்றனர். மிகவும் பாழடைந்த கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருந்த சுகாதார நிலையத்திற்கு நீதிமன்றம் வரை சென்று சொந்த இடம் வாங்கிக்கொடுத்து புதிய கட்டிடம் கட்டி, மாநில அமைச்சர்களால் திறப்புவிழா நடத்தியது இவரது குறிப்பிடத்தகுந்த சாதனையாகும்.

கடந்த மூன்று வருடங்களாக எய்ட்ஸ் (AIDS) தினமான டிசம்பர் ஒன்றாம் தேதி அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் சார்பாக அரவாணிகள், கல்லூரி மாணவ மாணவியர், செவிலியர் பயிற்சிப்பள்ளி மாணவிகளையும் ஒருங்கிணைத்து AIDS நோய் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் பேரணி, கருத்தரங்கம், மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார் இவர். மேலும் மாவட்டத்தில் நடைபெறும் அரசு மருத்துவ முகாம்களில் தேவைப்படும் அனைத்து நோயாளிகளுக்கும் ஸ்கேன் செய்து கொடுத்து வருகிறார்.

நாட்டு நலப்பணிகளான போலியோ சொட்டு மருத்துவமுகாம், இரத்ததான முகாம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கான பயிற்சி முகாம் மற்றும் கொசு ஒழிப்புப்பணிகளில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டு பேரணிகள், ஊர்வலங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகின்ற இவருக்கு மாவட்ட உயர் அதிகாரிகளின் பாராட்டுகளும், விருதுகளும் நிறைய கிடைத்துள்ளன.

தனது பெண்ணும் புனிதமான மருத்துவப்பணியை மேற்கொண்டு மக்களுக்குச் சேவை செய்யம் வேண்டும் என்ற இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் இவரது மகள் செல்வி J. சௌந்தர்யா தற்போது தஞ்சை மருத்துவக்கல்லூரியில் MBBS கடைசிவருடம் படித்துவருகிறார். செல்வி சௌந்தர்யா +2 தேர்வில் கொங்கு சமுதாய மாணவர்களில் முதல் மதிப்பெண் (1178/ 1200) பெற்றமைக்காக 2002 ஆம் ஆண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பரிசும், பதக்கமும் பெற்றார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

தாயைத் தொடர்ந்து பின்னர் மகள் சாதனை விருது பெறுவது தான் எங்கும் வாடிக்கை. ஆனால் மகளைத் தொடர்ந்து தாய் இன்று சாதனை விருது பெறுகிறார் என்பது மிகச்சிறப்பானது தான்.

வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து மீண்டு, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் சேவை செய்து வாழ்க்கைப்போராட்டத்தில் வென்று காட்டியுள்ள இவர், வாழ்க்கையில் உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை கொண்டு வெற்றிபெற நினைக்கும் பெண்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாவார். இவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



### திரு. A.K.P. சின்ராஜ்

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டத்தைச் சேர்ந்த அத்தனூர் கிராமத்தில் 1966 ஆம் ஆண்டு கண்ணங்கூட்டம் திரு. A.K. பழனியப்பன் – திருமதி செட்டியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் இவர்.

பள்ளிப்படிப்பை ராசிபுரம் அரசுப்பள்ளியிலும், B.Sc., பட்டப்படிப்பை திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும் முடித்தார். விவசாயத்திலும், கோழிப்பண்ணைத் தொழிலிலும் ஈடுபட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்தார். நகைத்தொழிலிலும் ஈடுபட்டு சிறந்த தொழிலதிபராகவும் இன்று திகழ்கிறார்.

ராசிபுரத்தில் சொந்தமாக 20 ஏக்கர் நிலத்தில் நவீன முறையில் விவசாயம் செய்து ஒரு சிறந்த, வெற்றிகரமான விவசாயியாக இன்று திகழ்கிறார். சுமார் ஐந்து லட்சம் கோழிகளை வைத்து சுஜிதா கோழிப்பண்ணை அதிபராகவும், சுஜிதா கோழித்தீவன உற்பத்தியாளராகவும் திகழ்கிறார். ராசிபுரம் நகரில் சுஜிதா கோல்ட் ஹவுஸ் என்ற ஒரு தரமான தங்கநகை மாளிகையை நிறுவி அதைத் திறம்பட நடத்தி, மற்ற தங்க நகைக்கடைகளுக்கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில், நகைக்கடை தொழிலிலும் கொங்கின மக்கள் யாருக்கும் சளைத்தவர் இல்லை என்று நிரூபிக்கும் வண்ணம் ஒரு சிறந்த தொழிலதிபராக விளங்குகிறார். நாமக்கல்லிலும் சுஜிதாஒரு கிராம் ஜுவல்லரி என்ற நகைக் கடையை நன்முறையில் கொங்கு மக்களின் பாராட்டுதல்களோடு நடத்திவருகிறார். அத்தனூரில் சுஜிதா ஒரு கிராம் தங்க உற்பத்தி நிலையம் ஏற்படுத்தி வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

இராசிபுரம் வட்டம், கொங்கு வெள்ளாளக் கவுண்டர்கள் பேரவை மற்றும் அறக்கட்டளை என்ற ஒருங்கிணைந்த அமைப்பின் பொருளாளராக இன்றுவரை

பதவி வகித்து வருகிறார். கொங்கு இளைஞர் அணியின் மாநிலச் செயலாளராகவும், இராசிபுரம் ரோட்டரி கிளப் தலைவர் மற்றும் இயக்குநராகவும் பொறுப்புகள் வகித்துள்ளார்.

தற்போது இராசிபுரம் வட்டார வளர்ச்சிக்குழுத் தலைவராகவும், நாமக்கல் மாவட்ட ஹாக்கி சங்கத்தின் தலைவராகவும், இராசிபுரம் ரோட்டரி கிளப் இயக்குநராகவும், இராசிபுரம் வட்டம் அரசு உயர்நிலைப்பள்ளிகள் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் உள்ளார்.


இவர் 1996 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இராசிபுரம் தொகுதியில் கொங்குச் சமுதாயம் சார்பில் போட்டியிட்டு 23,400 வாக்குகள் பெற்று, வெற்றி வாய்ப்பை சுமார் 3000 வாக்குகளில் இழந்தார். இவ்வளவு வாக்குகள் பெற்று சமுதாயத்தின் வலிமையைக் காட்டியது ஒரு பெரும்சாதனையாகும். இராசிபுரத்தில் நான்கு ஏக்கர் நிலத்தில் ஒரு பெரிய கொங்கு மண்டபத்தை உருவாக்கியத்தில் இவருக்குப் பெரும் பங்குண்டு. ஒவ்வொரு குடும்பத்திலும் தலா ரூ. 500/– பெற்று, அனைவரையும் பங்குதாரர்களாக்கி இந்த மண்டபத்தை உருவாக்கியது மிகவும் பாராட்டும்படியான அரிய செயலாகும். இதற்காக திரு. சின்ராஜ் அவர்கள் அளித்த உழைப்பு, செலவிட்ட நேரம், கொடுத்த தொகை அனைவரையும் வியக்கவைக்கும் வகையில் இருந்தன. இராசிபுரம் வட்டத்தில் சுமார் 45000 கொங்கு குடும்பங்கள் வட்டார அளவில் ஒரே கொங்கு அமைப்பின் மூலம் இன்று ஒற்றுமையாகச் செயல்பட்டு வருகின்றன என்றால் அதற்கு முக்கியக் காரணமாகத் திகழ்பவர் திரு. சின்ராஜ் அவர்கள்.

1998 ஆம் ஆண்டு மாநில அளவில் இராசிபுரத்தில் ஹாக்கி போட்டி நடத்திய பெருமை இவருக்குண்டு. ரோட்டரி கிளப் மூலம் பல பொதுப் பணிகளும், தனிப்பட்ட முறையில் சில கட்டிடங்களும் கட்டிக்கொடுத்த சிறப்புப் பெற்றவர். இராசிபுரம் வட்டத்தில் பல பள்ளிகளுக்கு கணினி இயந்திரங்கள் வாங்கித்தந்தது, பல கோயில்களுக்கும் திருப்பணிகளுக்கும் பெருமளவில் நிதியுதவி செய்தது, அனாதை இல்லம், முதியோர் இல்லம் போன்றவற்றிற்கு உணவு, உடை மற்றும் நிதியுதவி செய்தது போன்ற தான தர்ம காரியங்களை மனித நேயத்தோடு செய்து கொண்டு வருகிறார்.

இந்த ஆண்மகனின் வெற்றிக்குப்பின் நிற்பவர் இவருடைய மனைவி திருமதி சாந்தி, சி.சுஜிதா என்ற மகளும், சி. சுகந்த் என்ற மகனும் பள்ளியில் படித்து வருகிறார்கள்.

தொழிலிலும், சமுதாயப்பணியிலும் சிறந்து விளங்கும் இவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு சாதனையாளர்



## திரு. விசா M. சண்முகம்

கரூர் மாவட்டம் வாங்கல்பாளையம் (இனாம் கரூர்) கிராமத்தில் அந்துவன் குலம் திரு. எஸ்.மருதுமுத்த கவுண்டர் – திருமதி விசாலாட்சி அம்மாள் தம்பதியருக்கு, 1963 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் இவர். இவருடைய தந்தை திரு. மருதமுத்து கவுண்டர் நாகம்பள்ளி செல்லாண்டியம்மன் அணை கருப்பண்ணசாமி தர்ம பரிபாலன அறக்கட்டளையின் செயலாளராக உள்ளார்.

1989 ஆம் ஆண்டிலிருந்து விசா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தைத் துவங்கி ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தொழிலைச் சிறப்புறச் செய்து வருகிறார். ரோட்டரி சங்கத்தில் 20 ஆண்டு காலமாக தீவிர உறுப்பினராய் உள்ள இவர் கரூர் ஜீபைல் சங்கத்திலும், ஏற்றமதியாளர் சங்கத்திலும் உறுப்பினராய் உள்ளார். தொழில் சம்பந்தமாகப் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர் இவர்.

கரூர் வட்ட கொங்கு இளைஞர் அணி 1988 ஆம் ஆண்டு துவங்கியது முதல் அதில் தீவிரமாகச் செயல்பட்டு, 1991 ஆம் ஆண்டு அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். ஈரோட்டில் 1988ல் நடந்த கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் முதல் மாநில மாநாட்டிற்கு 50 லாரி, பஸ்களில் கொங்கின மக்களை கரூர் பகுதியிலிருந்து அழைத்துச்சென்று திரு. கோவை செழியன் அவர்களின் பாராட்டைப்பெற்றார். 1991 ல் நாமக்கல்லில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டிற்கு 150 லாரி, பஸ்களில் கரூர் பகுதியிலிருந்து கொங்கு சொந்தங்களை அழைத்துச் சென்றார். 1992 ஆம் ஆண்டு அன்றைய மாநிலத் துணைத்தலைவர் திரு.மோகன் கந்தசாமி அவர்கள் தலைமையில் கொங்கு வேளாளர் பேரவையின் கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சியில் நடைபெற்ற மாபெரும் மறியல்

போரட்டத்தில் சுமார் 60 பஸ், வாரிகளில் கரூர் பகுதியிலிருந்து வந்த கொங்கின மக்களுடன் கலந்துகொண்டு கைதானார். இக்காலகட்டத்தில் கரூரைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் கொங்குப் பேரவையின் மாநிலத் தலைவர்களை அழைத்து வந்து கொங்கு இளைஞர் அணியின் கிளைகளைத் துவக்கியும், பெயர்ப்பலகைகளைத் திறந்தும், கொடியேற்று விழா நடத்தியும் இன எழுச்சியை ஏற்படுத்த முக்கியக் காரணமாகத் திகழ்ந்தார்.

1994 ஆம் ஆண்டு கரூரில் நடைபெற்ற கொங்குப்பேரவையின் மூன்றாம் மாநில மாநாடு வரலாறு படைக்கும் வகையில் சுமார் பத்து லட்சம் இனமக்கள் கலந்து கொண்டு நடந்ததற்கு, திரு. விசா. சண்முகம் அவர்கள் முக்கியக் காரணமாகத் திகழ்ந்தார். இந்த மாநாட்டில் தான் கரூர் மாவட்டம் உருவாக வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. 1995 ல் கரூர் மாவட்டம் உதயமானது. கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை உருவாவதற்கு பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர். 1995ஆம் ஆண்டு கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் மாநில துணைப்பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றார். 1996ஆம் ஆண்டு கொங்கு பேரவையின் நான்காம் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு இவர் தலைமையில் கரூர் பகுதியிலிருந்த சுமார் 200 கார், லாரி, பஸ்களில் கொங்கு இன மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

1995 ல் கொங்குப் பேரவையின் மாணவரணி மாநில மாநாடு கோவையில் நடைபெற்ற போது இவர் சுமார் 60 லாரி, பஸ்களில் கொங்கு சொந்தங்களை கரூர் பக்தியிலிருந்து அழைத்துச்சென்று மாநாட்டில் கலந்துகொள்ள வைத்தார். 1996ல் கரூர் நகர்மன்றத் துணைத்தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு, கரூர் நகர வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

கரூர் கொங்கு நண்பர்கள் சங்கம் மூலமாக ஓர் ஏழைமாணவியைப் பொறியியல் கல்லூரியில் நான்கு வருடம் முழு நிதி செலுத்திப் படிக்க வைத்தவர். 2000 ஆம் ஆண்டு முதல் கரூர் கொங்கு இளைஞர் அணியின் மாவட்டப் பொருளாளராய்ப் பொறுப்பு வகித்து வருகிறார். பல ஏழை மாணவர்களுக்குக் கல்விக்காக உதவிகள் செய்து வருகிறார். 2007 ஆம் ஆண்டு கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவராகப் பொறுப்பேற்று சமுதாய

வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகிறார். தற்போது கொங்கு அறக்கட்டளையின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.

இவரது மனைவி திருமதி சாந்தி இவரது சமுதாயப்பணிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகிறார். மகள் செல்வி எஸ். சிந்து பைரவி கோவை கல்லூரியில் B.Arch இரண்டாம் ஆண்டும், மகன் K.S. அஸ்வின் குமார் பத்தாம் வகுப்பிலும் படித்து வருகின்றனர். மகன் அஸ்வின் குமார் இறகுப்பந்து விளையாட்டில் சென்ற ஆண்டு தேசிய அளவில் பங்கேற்றார்.

கொங்கின எழுச்சிக்காகப் பாடுபட்டு மிகச்சிறப்பான முறையில் சமுதாயப் பணியை ஆற்றிவரும் இவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## திரு. T.K. கைலாசம்

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தைத் சேர்ந்த தொட்டிப்பாளையம் என்ற கிராமத்தில் 1960 ஆம் ஆண்டு திரு. T.S. கந்தசாமி கவுண்டர் – திருமதி முத்துலட்சுமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் திரு. கைலாசம் அவர்கள். P.U.C. வரை படித்த இவர், கடந்த 20 ஆண்டுகளாகச் சிறப்பான முறையில் விவசாயம் செய்து வருகிறார்.

நெல், கரும்பு, வாழை, மஞ்சள், தென்னை, மக்காச்சோளம் ஆகியவற்றைத் தொடர்ந்து விளைவித்து வருகிறார். இரவைப்பாசன நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கி அதிக மகசூல் எடுத்து மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பரிசுகள் பெற்றுள்ளார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு, “கொங்கு வேளாண் சாதனையாளர்” விருதை வழங்கிப் பாராட்டுகிறது.

## கொங்கு வேளாண் சாதனையாளர்

# திரு. T.C. கந்தசாமி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் உள்ள திருவேங்கிடம்பாளையம் கிராமத்தில் 1947 ஆம் ஆண்டு திரு. சென்னியப்ப கவுண்டர் - திருமதி. நாச்சியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர்.

சென்னை புதுக்கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்த இவர் 25 வருடங்கள் சென்னை L&T நிறுவனத்தில் பணியாற்றினார். பணி ஓய்வு பெற்றபின் பவானி அருகில் 12 ஏக்கர் நிலம் வாங்கி விவசாயம் செய்ய ஆரம்பித்தார். நிலத்தடி சொட்டு நீர் பாசன முறையைக் கையாண்டு, பெரும்பாலான வேலைகளை இயந்திரங்கள் மூலம் செய்து, கரும்பு சாகுபடியில் சாதனை புரிந்துள்ளார்.

கரும்பு சாகுபடியில் சாதனை புரிந்துள்ள திரு. T.C. கந்தசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு வேளாண் சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது.

## கொங்கு வேளாண் சாதனையாளர்

### திரு. P. கணேசன்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகில் உள்ள வாலிபாளையம் கிராமத்தில் 1964 ஆம் ஆண்டு திரு. பொன்னுசாமி கவுண்டர் அவர்களின் மகனாகப் பிறந்தவர்.

1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை புங்கம்பள்ளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவராய்ப் பணியாற்றினார். சொந்த ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக 2 ஏக்கர் நிலத்தை இலவசமாகக் கொடுத்தவர். தற்போது பவானி சாகர் ஒன்றிய விவசாயக் குழுத்தலைவராய் உள்ள இவர் 2006 ஆம் ஆண்டு மானாவரி நிலக்கடலை சாகுபடியில் மாநில அளவில் சாதனை படைத்ததற்காக மாவட்ட ஆட்சியரிடம் முதல் பரிசு பெற்றார்.

நிலக்கடலை சாகுபடியில் சாதனை புரிந்த இவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு வேளான் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்

## திரு. M. நவீன்குமார்

ஈரோடு மாவட்டம், எழுமாத்தூர் தொட்டிபாளையத்தைச் சேர்ந்தவரும், உயர்நீதிமன்ற வழக்கறிஞரும், சங்கத்தின் நீண்ட கால உறுப்பினருமான திரு.S.T.S.மூர்த்தி – திருமதி சரோஜா தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் பனங்காடன் குலச்செல்வன் எம்.நவீன் குமார்.

சென்னை அண்ணாநகர், S.B.O.A. பள்ளியில் பள்ளிப்படிப்பைச் சிறந்த மாணவர் என்ற சிறப்புடன் முடித்தபிறகு சென்னை டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரியில் B.L. முதலாண்டு படித்து வருகிறார்.

2007 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் நடந்த அகில இந்திய சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான Moot Court Competition (மாதிரி கோர்ட்டில் வழக்கு நடத்தும் போட்டி) போட்டியில் முதல் பரிசு பெற்று தங்கக் கோப்பை, பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக புதுடெல்லியில் நடக்க இருக்கும் போட்டியிலும் கலந்துகொள்ளத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய மாணவர் படை, சாலை பாதுகாப்புப் பணிபடை, Canstop அமைப்பு, Banyan அமைப்பு, IV Pillar Foundation ஆகிய அமைப்புகளில் பங்கேற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

Moot Court Competition-ல் தேசிய அளவில் சாதனை படைத்த செல்வன் எம். நவீன்குமார் மேலும் பல சாதனைகளைப் புரிந்திட வாழ்த்தி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு, “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்

## செல்வி ஹர்சவர்தினி

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலத்தைப் பூர்விகமாகக் கொண்டவர் சென்னை C.S.I. ஜென்ஸி மோசஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு படிக்கும் செல்வி ஹர்சவர்தினி. அமரர் சரவணன் – திருமதி விஜயகல்யாணி தம்பதியரின் மகளான இவர் அந்துவன் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாட்டுச்சபை (United Nations) நடத்திய கம்ப்யூட்டர் மூலம் கட்டுரை சமர்ப்பிக்கும் போட்டியில் பயங்கரவாதம் (Terrorism) என்ற தலைப்பில் இவர் கலந்துகொண்டு Best Presentation Award 2006 ஐ பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இதைத் தொடர்ந்து இவர் ஐக்கிய நாட்டுச்சபையில் "Student Ambassador of Asia" வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னையில் Yuga (Youth United for Global Awakening) என்ற சமூகநல அமைப்பையும் ஏற்படுத்தியுள்ளார். 2007 ஆம் ஆண்டு UNO அமைப்பால், WHO மற்றும் FAAU நிறுவனங்களின் Inspectress ஆகவும் நியமிக்கப்பட்ட பெருமை இவருக்குண்டு.

ஜெனிவாவில் உள்ள World Technical Writers Association என்ற அமைப்பு இவருக்கு Best Writer of the year 2006 மற்றும் The Youngest Technical Writer of the year 2006 என்ற விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்தியாவின் சார்பாக Elites and Entrepreneurship Conference 2007 என்ற மாநாட்டில் கலந்து கொண்டார். Young EmergingLeaders பட்டியலில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இச்சிறு வயதில் சாதனை புரிந்துள்ள இவரைக் கொங்கு நண்பர்கள் சங்கம் மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துவதோடு "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது.

## கொங்கு இளம் சாதனையாளர்

### செல்வி R. சஞ்சு ஸ்ரீ

கொங்கு நாட்டு இளம்பெண்கள் படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டிலும் சாதனை படைப்பவர்கள் என்பதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் இளம் வீராங்கனை செல்வி ஆர். சஞ்சுஸ்ரீ.

நாமக்கல் மாவட்டம், பேளுக்குறிச்சி கிராமத்தில் திரு. பி. சீரங்கன் – திருமதி தனலட்சுமி தம்பதியரின் இளைய மகளாகப் பிறந்தவர் இவர். நாமக்கல் அருகில் உள்ள ஸ்ரீவாணி மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துவரும் இவர் (Gymnastic) ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனைகள் படைத்து வருகிறார்.

பள்ளிகளுக்கிடையிலான மண்டல ஜிம்னாஸ்டிக் போட்டியில் முதலிடம், ராசிபுரத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஜிம்னாஸ்க் போட்டிகளில் முதலிடம், மாநில அளவில் ஏலகிரி மற்றும் திருச்சியில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் எனச் சாதனைகள் புரிந்தவர். தமிழ்நாடு அணியில் இடம்பிடித்து, மணிப்பூர் மாநிலம் இம்ப்பால் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் (ரிதமிக் + ஏரோபிக்) இருபிரிவுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார். ஈரோடு வேளாளர் பொறியியல் கல்லூரியில் B.E., முதலாண்டு படித்துவரும் இவருடைய அக்கா செல்வி ஆர். சுஜித்தா வும் அத்லடிக் விளையாட்டுப்போட்டிகளில் மாவட்ட அளவில் பல பதக்கங்களையும் பரிசுகளையும் வென்றுள்ளார்.

ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் சாதனைகள் படைத்துள்ள செல்வி ஆர்.சஞ்சுஸ்ரீ மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்தி, இவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

## கொங்கு இளம் சாதனையாளர்

**செல்வன் அஸ்வத் P. ஹரி** **செல்வன் அதர்ஷ் P. யஷ்வந்த்**

1998 ஆம் ஆண்டு திருப்பூர் நகரைச் சேர்ந்த திரு. பத்பநாபன் – திருமதி கவிதா லட்சுமி தம்பதியருக்கு இரட்டை குழந்தைகளாகப் பிறந்தவர்கள் செல்வன் ஹரி மற்றும் செல்வன் யஷ்வந்த்.

ஆறாம் வயதில் Chess விளையாட ஆரம்பித்த இவர்கள் இருவரும் தற்போது கோவை வித்யா நிகேதன் பள்ளியில் மூன்றாம் வகுப்புதான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் நிகழ்த்தியுள்ளதோ இமாலய சாதனை என்றால் அது மிகையல்ல. இந்த வயதில் Chess விளையாட்டில் சாதனை படைத்த இரட்டையர்கள் இவர்கள் மட்டுமே. இவர்கள் தினமும் படிப்பது 2 மணி நேரம், ஆனால் Chess விளையாடுவது 4 மணி நேரம். இது அன்றாட நிகழ்வு. பள்ளி முதல்வர் திருமதி ரஜினி கிருஷ்ணமூர்த்தி மற்றும் பெற்றோரின் ஊக்குவிப்பிலும் உழைப்பிலும் மலர்ந்ததுதான் இந்தச்சாதனை.

2006 ஆம் ஆண்டு பள்ளியில் இவர்களுக்கு Best Performance Children Award - 2006 வழங்கப்பட்டது. தேசிய அளவில் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் நடந்த போட்டி, தலைநகர் டில்லியில் நடைபெற்ற போட்டி, ஈரான் நாட்டு டெஹ்ரான் நகரில் நடந்த போட்டி, மாநில அளவில் நாகர் கோயிலில் நடைபெற்ற போட்டி உட்பட இதுவரை 200 க்கும் மேற்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளையும் பாராட்டுதல்களையும் அள்ளிக் கொண்டு வந்துள்ளனர். தற்போது பெங்களூரில் நடைபெற உள்ள தேசிய அளவிலான போட்டிக்குப் பயிற்சி பெற்று வருகின்றார்.

இச்சாதனைகளால் தமிழகத்திற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்திருக்கும் இந்த இரட்டையர்கள் Chess Grand Master ஆக வளர வேண்டும் என வாழ்த்தி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவர்களுக்கு “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டுகிறது. சாதனைகளுக்குத் துணைநிற்கும் இவர்களது பெற்றோர்களையும் சங்கம் பெரிதும் பாராட்டுகிறது.